Home Accounts for International Call www.threetel.com
Contact: 02078998559 3TEL

Dosa n Sambar
The Best Indian Experience in UK
Opens 7 Days a Week 11 am Till Midnight *
We Do Outdoor Catering
2 Morden Court Parde, London Road, SM4 5HJ
TP: 02086401908 . Web: www.dosansambar.co.uk
South Indian & Sri Lankan Cusine
potato curry £ 8.95
BIRYANI VEG - £ 1.95 CHICKEN - £ 2.50 MUTTON - £ 2.95
3 வடை(மசாலா/மெது) - £1
3 Rolls - £ 1
மசாலா தோசை - £ 1.95
Free Delivery Over £ 15 3 Miles Radious
Offers Limited Period Only & Collection Only
Friday Special Veg Thaley Rice With 15 Veg Curry £ 4.95

SURIYA Jewels
22ct Singapore Gold
"உண்மை வெல்லும்"
சூர்யா ஜுவலர்ஸ்
292, HIGH STREET, NORTH EASTHAM - LONDON E12 6SA
TEL : 0208 552 2224 FAX : 0208 8219435

SKY WINGS LTD
"Where the Sun Never Sets"
Colombo
We accept all major credit cards
We are authorised main agent for Sri Lankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Head Office: 119, Tooting Hight Street, London, SW170SY
Reservations please call: 0208 672 9111 0785 087 6921
bala@skywings.co.uk

இல்லத்தரசிகளின் சேமிப்புக்கு உத்தரவாதம்
இன்றைய இலத்திரனியல் உலகின் நண்பன் www.homecheckout.co.uk

வாகன விபத்தா? உடன் அழையுங்கள்
INJURY CLAIMS ADVICE BUREAU LTD
0208 933 7921 / 0793 276 2452
REGUS HOUSE, 30 LOCKET RD, HARROW, HA3 7LZ

Sudar Oli
# சுடர் ஒளி
Published by Uthayan Ltd.
உன்னதமாய் தமிழின் ஒளி உலகமெலாம் பரவட்டும்
தொலைபேசி: 020 7078 8870 www.sudaroli.co.uk தொலைநகல்: 020 7899 8559

சுடர் - 01 • 21-10-2011 • வெள்ளிக்கிழமை • ஒளி - 08



## லியம் ஃபாக்ஸின் தமிழர் விரோத போக்குகள்

### அம்பலமாக்கும் தமிழர்.

பிரிட்டனின் பாதுகாப்புச் செயலர் லியம் ஃபாக்ஸ் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். தனது ஆலோசகரான ஆடம் வெரிட்டியுடன் பேணியிருந்த நட்பு தொடர்பாக எழுந்த சர்ச்சையால் அவர் பதவி விலகும் நிலை ஏற்பட்டது அதைத் தொடர்ந்து அவர் பற்றிய பல அதிர்ச்சியான செய்திகள் வெளியாகத் தொடங்கியுள்ளன. ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சில முக்கியஸ்தர்களும் லண்டன் வந்தவேளை டாக்டர் ஸ்ரீனி வாசன் என்னும் தமிழருடன் தொடர்புகொண்டுள்ளனர். இவர்கள் ஊடாக லியாம் பொ.்.க்ஸ் தன்னைத் தொடர்புகொண்டதாக டாக்டர் ஸ்ரீனி வாசன் அவர்கள் தெரிவித்துள்ளார். தான் அதிர்ச்சியடைந்த விடையங்கள் பல உள்ளதாக அவர் மேலும் விபரித்துள்ளார். தன்னைச் சந்தித்த லியாம் பொ.்.க்ஸ்

4ம் பக்கம் பார்க்க

## இவ்வளவு கொடுமைகளையும் பார்த்த பின் இன்னும் உயிர்வாழ வேண்டுமா?

### ஆனந்த சங்கரி வேதனை.

காணி அபகரிப்பு மற்றும் சிங்களக்குடியேற்றங்களுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 17.10.2011 அன்று நடாத்திய உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டு தலைமையுரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.
முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு முதல் நந்திக்கடல்வரை சுமார் 8000ஏக்கர் பரப்பளவில் இந்த இடம் விமானப்படைக்குரியது என்று பலகை வைத்துள்ளார்கள். அதைப்பார்த்ததும் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதனைவிடவும் சிவசக்தி ஆனந்தன் சொன்ன விடயம் இன்னமும் எனது மனவேதனையை அதிகரித்து விட்டது. இத்தகைய அடாவடித்தனங்களைக் கண்டபிறகும் எனது உயிர் பிரிய மாட்டேன் என்கிறதே என்று எனக்குக் கவலையாக உள்ளது. இன்னும் நான் ஏன் வாழ வேண்டும் என்று கேட்கத்தோன்றுகிறது என்றும் கூறினார்.

கடந்த 30ஆண்டுகால வாழ்க்கையில் எமதுமக்கள் இலட்சக்கணக்கில் மடிந்துள்ளனர். இறந்தவர்கள் ஒன்றும் பிச்சைக்காரர்கள் அல்ல

4ம் பக்கம் பார்க்க

## இலண்டனில் தயார் நிலையில் 200 மனித வெடிகுண்டுகள்

### ஒலிம்பிக் போட்டி குறி வைக்கப்படும் அபாயம்.

லண்டனில் வசிக்கும் 200 க்கும் மேற்பட்ட மனித வெடி குண்டுகள் தாக்குதலுக்கு தயார் நிலையில் உள்ளதாக தெரிய வந்துள்ளது.
அடுத்த வருடம் லண்டனில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளைக் குறி வைத்தே தாக்குதல்கள் இடம்பெறக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
லண்டனில் உள்ள 2000 க்கும் மேற் பட்ட

4ம் பக்கம் பார்க்க

## ஹரோ தமிழ்ச் சங்க முதியோர் நிலைய ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா

இலண்டனில் வாழும் தமிழ்முதியோர் நலத்துடனும், மன அமைதியுடனும், தனிமையின்றியும், ஆரோக்கிய வாழ்வுக்கான பலதிட்டங்களை செயற்படுத்தி வரும் ஹரோ தமிழ்ச் சங்க முதியோர் நிலையம் அதன் ஐந்தாவது ஆண்டு நிறைவை பெரும் கலைவிழாவாக கொண்டாடியது

இக்கலைவிழாவில் சமூகசேவையாளருமாகிய திரு. ஐ.தி.சம்பந்தன் அவர்கள் பிரதம அதியாகவும், கௌரவ விருந்தினராக ஹரோ நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஹரித் தொமஸ், விருந்தினர்களாக ஹரோ கவுன்சிலர் திரு. தயா இடைக்காடர், கவுன்சிலர் சுரேஸ் கிருஸணா,திருமதி சசிகலா சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்

BLJ Solicitors
BISHOP LLOYD AND JACKSON SOLICITORS

OUR TOUR PLANETS.COM

தமிழ் இறைச்சிக்கடை EAST HAM ல்
355 High Street North, Manor Park London E12 6PQ
Tel: 020 8548 1503 Mob: 079 0460 7186

தரமான சுவையான உணவுகள்
New Dosa Express
srilankan & South Indian Take Away
07828124661 / 07404911711

JK Accountants ACCA
Accounting, Bookkeeping, Payroll Services and Tax Advice in East London
Tax Returns | VAT Returns
Payroll | Solicitors Accounts
Bank Reconciliation | Company Formation
Business Plan | CGT & Death Tax Advice
Cash-flow Forecast
தரமான சேவை நிறைவான கட்டணம்
TTP: 02084711644/02084712200
Fax: 020847110101
230, High Street North, East Ham, London E 12 6SA
info@jkaccountants.com www.jkaccountants.com

ASTA COLLEGE
ESOL Skills For Life with Citizenship
CITIZENSHIP TEST
UK HOME OFFICE இனால் அங்கீகரிக்கப்பட்டது.
ASTA COLLEGE
TRIDENT BUSINESS CENTRE,
89 BICKERSTETH ROAD, TOOTING, LONDON, SW17 9SH
TEL : 020 8355 3453 MOB : 07958 178321

LEWISHAM BEST FOOD
ENS தமிழ் கடை
5% OFF
தாயக, இந்திய மளிகைப் பொருட்கள் உடன் மரக்கறி வகைகள்,
OFF LICENCE, சனி, ஞாயிறில் உடன் மீன்வகைகள்
Tel: 0208 692 9811 / 0208 692 1811 / 0794 075 4765
30 Loampit Hill, Lewisham, London, SE13 7SW

Accident Courtesy
வாகன விபத்தா?
Courtesy Car
0800 2321 523
07903 810 196

# Special Flight Offers from TravelCenter
in www.ticketstosrilanka.co.uk

*Special Flights with Best Airlines at unbeatable prices..*



## Season's best offers
# Amazing & Unbeatable Prices!

0207 612 0599

Sri lanka Specialist
www.ticketstosrilanka.co.uk





SriLankan Airlines

**FLYSMILE OFFER**
from £210 + tax

Fly with us & get a cab for just £10
Call Now 0207 612 0599

THAI · SriLankan · Oman Air · QATAR · malaysia · ETIHAD · KINGFISHER · CATHAY PACIFIC · SINGAPORE AIRLINES · JET AIRWAYS · BRITISH AIRWAYS · KUWAIT AIRWAYS · ROYAL JORDANIAN · GULF AIR · Emirates

### *Special Deal of the Week*
## Fly to Colombo
05 Oct 11- 30 Non 11

ROYAL JORDANIAN fr £125 + taxes

| | |
|---|---|
| Colombo | fr £270 + tax |
| Jakarta | fr £240 + tax |
| Bangkok | fr £270 + tax |
| Bangalore | fr £280 + tax |
| Trivandrum | fr £280 + tax |

### ETIHAD

| | |
|---|---|
| Chennai | fr £225 + tax |
| Kochi | fr £225 + tax |
| Trivandrum | fr £225 + tax |
| Kuala Lumpur | fr £205 + tax |
| Singapore | fr £429 + tax |

*terms & conditions apply*

### Fly Emirates

| | |
|---|---|
| Kochi | fr £405 + tax |
| Chennai | fr £405 + tax |
| Trivandrum | fr £405 + tax |
| Kuala Lumpur | fr £455 + tax |
| Bangalore | fr £365 + tax |

*terms & conditions apply*

### KUWAIT AIRWAYS

| | |
|---|---|
| Chennai | fr £225 + tax |
| Kochi | fr £205 + tax |
| Trivandrum | fr £225 + tax |
| Colombo | fr £205 + tax |
| Kuala Lumpur | fr £295 + tax |

*terms & conditions apply*

### OMAN AIR

| | |
|---|---|
| Bangalore | fr £189 + tax |
| Kochi | fr £225 + tax |
| Chennai | fr £205 + tax |
| Trivandrum | fr £255 + tax |
| Kuala Lumpur | fr £295 + tax |

*terms & conditions apply*

### QATAR

| | |
|---|---|
| Bangalore | fr £175 + tax |
| Kochi | fr £295 + tax |
| Trivandrum | fr £229 + tax |
| Chennai | fr £215 + tax |
| Singapore | fr £289 + tax |

*terms & conditions apply*

### JET AIRWAYS

| | |
|---|---|
| Trivandrum | fr £299 + tax |
| Kuala Lumpur | fr £375 + tax |
| Singapore | fr £629 + tax |
| Bangalore | fr £369 + tax |
| Chennai | fr £369 + tax |

*terms & conditions apply*

*Note : All prices quoted were correct at the time of printing, please call us on 0207 612 0599 to avail best cheapest price.*

CRYSTAL TRAVEL · SAM TRAVEL & TOURS · TRAVELCENTER

Call us on : 0207 612 0599

Wajira - 0207 612 7250
Nadee - 0207 612 0546

IATA

38, RIDING HOUSE STREET, LONDON W1W 7ES, U.K · e-mail : info@travelcenteruk.co.uk · web : www.travelcenteruk.co.uk

# சுடர் ஒளி

Uthyan Ltd
Suite 501, Kemp House, 152 - 160 City Road, London, EC1V 2NX
Phone : 02070788870, Fax : 02078998559
E- mail : info@sudaroli.co.uk, Web : www.sudaroli.co.uk


## ஒளிக்கீற்று

### ........தமிழர் தலைவிதி புலத்தில்..........

இலங்கை தீவில் சுதந்திரத்துக்கு பின் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் அறுபது வருடங்களுக்கும் மேலாக ஒரு தெளிவான செய்தியை மீண்டும் மீண்டும் உணர்த்தியே வந்தன அது " நாங்கள் பெரும்பான்மையினம் உங்களுக்கு இந்த நாட்டில் இருக்க விருப்பம் என்றால் வாயை மூடிக்கொண்டு எங்களை பற்றி பிடித்துக்கொண்டு நாங்கள் தருவதை வாங்கிக்கொண்டு வாழ கற்றுக்கொள்ளுங்கள் உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை நீங்கள் தீர்மானிக்க கூடாது மீறி கேள்வி கேட்டால் எம் இனத்தினால் உங்கள் மீது பிரயோகிக்கப்படும் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் " இது ஒவ்வொரு சிங்கள ஆட்சியாளனும் ஏதாவது ஒரு வகையில் தமிழ் மக்களிடம் சொன்ன செய்தி இதை ஒரு தலை முறை அஹிம்சை வழியில் எதிர்கொண்டது அடுத்த தலைமுறை ஆயுதம் கொண்டு எதிர்த்தது ! இரண்டும் ஏதாவது ஒரு வழியில் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ ஒடுக்கப்பட்டுள்ளது அல்லது மௌணிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் வாழ்வின் இன்னல்களை சமாளித்துக்கொண்டு தாயகத்தில் தம் ரத்த ரத்தமற்ற உறவுகளுக்காகவும் சேர்த்து உழைத்து போராட்டத்திலும் அணில்களை போல தாராள பங்களிப்பு செய்து இன்று தமிழர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் தமிழ் சக்தி என்னும் உன்னத நிலையையும் அடைந்துஉள்ளான் போராடிய நாற்பதாயிரம் போராளிகளின் இன்னுயிரையும் பறிகொடுத்து இரண்டு லட்சத்திற்க்கு மேலானா அப்பாவி மக்களின் உயிர்களையும் பறிகொடுத்து முள்ளிவைக்காலில் எங்கள் தமிழ் ஒடுக்கப்பட்ட போதும் இன்னமும் நாம் நாமாகவே இருக்கிறோம் எங்கள் லட்சியத்தில் தெளிவாக இருக்கிறோம்

அன்புக்குரியவர்களே !

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னும் தாயகத்திலும் சரி புலத்திலும் சரி முன்வைத்த காலை ஒரு அடியேனும் பின்வைக்காத தமிழனின் கால்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளது உள்நாட்டு தேர்தல்களில் தமிழ்தேசிய கூட்டமைப்பை தெரிவு செய்து மக்கள் கிராம்மாக தங்கள் மன உறுதியை உலக சமூகங்களுக்கு வழியுறுத்துகின்றனர் , புலம் பெயர் தேசங்களிலும் ஒரே குடையின் கீழ் அணிதிரண்டு இப்போதும் அதன் பெரும்பான்மை பலம் கொண்டு தம் லட்சிய தீயை அவ்வப்போது வெளிக்காட்டிக்கொண்டிருக்கின்றனர் ஆனால் சிங்களம் தன அடுத்த கட்ட யுத்தத்தை எப்போதோ ஆரம்பித்துவிட்டது இப்போது அது அழிக்க களத்தில் வீரர்கள் இல்லை புலத்தில் எங்கள் உறவுகள் நீங்கள்தான் இருக்கின்றீர்கள் இப்போதும் சிங்களம் தமக்கு துணையாக வழக்கமான பிரித்தாழும் கொள்கையையும் அதற்க்கு துணையாக சில தமிழ் துரோகிகளையும் இணைத்துக்கொண்டு படை எடுத்துள்ளது

உள்நாட்டில் தொடர் தேர்தல் வெற்றிகளை பெரும் கூட்டமைப்பையும் புலம் பெயர் வாழ் சங்கங்கள் பிரமுகர்களிடையே குழப்பத்தை உருவாக்கி பிரித்து அழிக்க பகீரத பிரயத்தனம் செய்கின்றது தாயகத்திலும் சரி சர்வதேசத்திலும் சரி சிங்கள அரசை ஒரு போதும் குறைத்து மதிப்பிட கூடாது உள்நாட்டில் அதற்கு எதிரில் நிற்க்க கூட ஒரு கட்சி இல்லாத நிலை அதே நேரத்தில் சர்வதேச போர் குற்ற நெருக்குவாரங்களையும் சமாளிக்கும் திறனை அல்லது அதற்க்கான தயார் நிலையை உருவாக்கவும் அது எப்போதும் தயார் நிலையில் இருக்கின்றது ஏன் ஜனாதிபதியே இதை உலகுக்கு பகிரங்கமாக பிரகடன படுத்திவிட்டார்

வடக்கில் இடம்பெற்ற்ற மனிதாபிமான யுத்ததிற்கு உத்தரவிட்டது நானே அதற்க்கான முழு பொறுப்பையும் நான் ஏட்ட்ருக்கொள்ள தயாராக இருக்கிறேன் நாம் எந்த குற்றத்தையும் செய்யவில்லை எனக்கு எதிராக எவரும் வழக்கு தொடரலாம் எதையும் எதிர் நோக்கும் பலமும் நேர்மையும் எனக்கு உண்டு ஜனாதிபதியாக நான் இருக்கும் வரை ஏதும் செய்ய முடியாது என்றவாறு தம் இறுக்கத்தை சிங்களம் உலகுக்கு வெளிப்படுத்துகிறது

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தாயக மக்கள் தெளிவாக இருக்கும் அதே நேரத்தில் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட சில பிரமுகர்களோ தீர்க்க தரிசனமாக செயட்படாதது வருத்தத்தை அளிக்கின்றது எவ்வளவு பெரிய வரலாற்று கடமை தம்மிடம் ஒப்படைக்க பட்டுள்ளது என்பதை மறந்து செயற்படுவது வேதனையை தருகிறது அரசுடனான பேச்சுவார்த்தைகளில் தான் தோன்றித்தனமாக செயற்பட்டு பிற தமிழ் அரசியல் குழுக்களிடம் எந்த கலந்துரையாடலும் இல்லாமல் மறுபடியும் தோல்வியுடன் வெளியேறுகிறது இப்படியானதொரு சூழ்நிலையில்தான் தமிழர் தலை விதியை தீர்மானிக்கும் தீர்மானகரமானதொரு சக்தியாய் புலம் பெயர் தமிழர்கள் உருவெடுக்கிறார்கள்

ஆனால் அந்த சக்தியை அழிக்க சிங்களம் மில்லியன் கணகில் செலவு செய்கின்றது அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களையும் புத்தி ஜீவிகள் என்ற பட்டத்தை சுமக்கும் ஒரு சில அரை வேட்காடுகளையும் முள்ளி வாய்க்காலில் எம் மறத்தமிழனை அழிக்க பயன்படுத்திய அதே இனத்துரோகிகளையும் ஒன்று சேர்த்து எதிர்க்கின்றது முள்ளி வாய்க்காலுக்கு பிறகு புலத்தில் திடீர் திடீரென புதிய அமைப்புகள் உருவாக காரனியாய் அமைந்தவற்றை நோக்குமிடத்து மேலே சொன்ன சிங்களத்துக்கு துணை போகும் இதே துரோகிகளின் தூண்டுதல்கள் மிகையாக இருக்கின்றதை கசந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது இப்போதைய உடனடி தேவை எம்மை பிரிக்க முயலும் அத்தனை துரோகக்கும்பலையும் சரியாக இனங்காண்பது அவற்றை முறைப்படி சமாளிப்பது சர்வதேச நெருக்குதல்களுக்குள் விழி பிதுங்கி நிற்க்கும் சிங்களம் அடுத்து புலம் பெயர்தமிழர் சக்தியின் அடிமடியில் கைவைத்துள்ளது புதிய உலக அரசியல் ஒழுங்குக்கேட்ப தமிழர் போராட்டம் சரியான பாதையில் சரியான நேரத்தில் புலம் பெயர் உறவுகளின் கைகளுக்கு சென்று சேர்ந்துள்ளது தவற விடக்கூடாத இந்த வரலாற்று தருணத்தை சிறிய தவறுகளால் தவறவிடுவது அடுத்த பல சந்ததிகளுக்கு தமிழினம் இழைக்கும் துரோகமாகிவிடும் புலம்பெயர் தமிழர்களை சிதறடிக்கும் எண்ணத்துடன் வரும் சிங்களத்திடம் பலிக்கடாவாகாமல் இருக்க புலம்பெயர் அமைப்புகளே ஒன்று படுக காரணம் தமிழரின் தலை விதி இப்போது உங்கள் கைகளில்.

மீண்டும் புதிது புதிதாய் சந்தித்துக்கொள்வோம்!







## வடக்கு மக்களுக்கு சிவில் உரிமைகள் தொடர்ந்தும் மறுப்பு

### சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க



சுப்ரமணியம் தவபாலன் மீதான தாக்குதல் உட்பட வடக்கில், தொடர்ந்தும் நடைபெற்று வரும் மக்கள் விரோத செயற்பாடுகள், வடக்கில் உள்ள மக்களுக்கு சிவில் உரிமைகள் கிடைக்காது போயுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு இடமளிக்கும் அரசாங்கத்தின் துஷ்ட அரசியலை தோற்கடிக்க அணி திரண்டு வருமாறு சகல இலங்கையர்களிடமும் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் தவபாலன் கடந்த 16 ஆம் திகதி தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து பிமல் ரத்நாயக்க வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்ரமணியம் தவபாலன் கடந்த 16 ஆம் திகதி யாழ் நகரில் வைத்து மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்டுள்ளார். இந்த தாகுதல் சம்பவத்தை சோசலிச இளைஞர் சங்கம் வன்மையாக கண்டிப்பதாகவும் பிமல் ரத்நாயக்க தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

அண்மைகாலமாக யாழ்ப்பாணத்தில் சிவில், ஜனநாயக செயற்பட்டாளர்களுக்கு எதிராக தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசாங்கம், தொடர்ந்தும் கூறி வரும் நிலைமையிலேயே இப்படியான சம்பவங்கள் நடைபெறுகின்றன. இது வடக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமை அல்ல, அரசாங்கம். தெற்கிலும் பாதாள உலகத்தினருக்கும், வன்முறை அரசியலுக்கும் இடமளில்லை எனக் கூறி வரும் சூழலில், துப்பாக்கிகள் வெடிப்பதாகவும் கொலைகள் நடந்து வருவதாகவும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## அழைப்பாணையை இணையத்தளத்திலும் வெளியிட உத்தரவு

### அமெரிக்க நீதிமன்றத்தின் உத்தரவால் ஆட்டம் கண்டு போயிருக்கிறார் இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ச.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன், இலங்கை அரசின் போர்க் குற்றங்களை விசாரிக்க விசாரணைக் குழு ஒன்றை அமைத்தபோது, இலங்கையில் இருந்து உயிர் தப்பித்து வந்தவர்கள், அந்தக் குழுவிடம் தங்களது வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்.

அதில் முக்கியமானவர் வத்சலாதேவி. புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்த கேணல் ரமேஷின் மனைவி இவர். என் கணவரின் கொலைக்குக் காரணமான ராஜபக்சவைக் கைது செய்து விசாரிக்க வேண்டும் என்று நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் இவர் வழக்குத் தொடர்ந்தார். இது தொடர்பான அழைப்பாணையை ராஜபக்ச வாங்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில், டாக்டர் காசிப்பிள்ளை மனோகரன் என்பவர், என் உறவினர்களை சர்வதேசப் போர் விதிமுறைகளுக்கு மாறாக ராஜபக்ச உத்தரவுப்படி அவரது இராணுவத்தினர் கொன்று குவித்து இருக்கிறார்கள். அதனால், அவரிடம் விசாரணை நடத்தி, அவருக்கு தண்டனை வழங்க வேண்டும். என்று அமெரிக்காவின் கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அது தொடர்பாக, ராஜபக்சவுக்கு நீதிமன்றம் மூலமாக அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால், அதிபர் தரப்பு அழைப்பாணையை வாங்காமல் திருப்பிவிட்டது.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, பாதிக்கப்பட்டவர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் புஷரூஸ் பெயின், நீதிமன்றத்தில் இருந்து எந்த உத்தரவு அனுப்பினாலும், அதை ராஜபக்ச அரசு மதிப்பதே கிடையாது. அந்த உத்தரவைப் பெற்றுக்கொள்வதும் கிடையாது. அதனால், இலங்கையில் இருந்து வெளிவரும் இரண்டு முன்னணிப் பத்திரிகைகள் மற்றும் தமிழ்நெற் இணையத்தளத்தின் முதல் பக்கத்தில் இந்த நீதிமன்ற உத்தரவை வெளியிட உத்தரவிட வேண்டும். அதையே ராஜபக்சவுக்கு அனுப்பிய அழைப்பாணையாக அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

விசாரித்த நீதிபதி கோடெல்லி, ராஜபக்சவுக்கு அனுப்பிய அழைப்பாணையை இலங்கையில் இருந்து வெளிவரும் செய்தித்தாள்களிலும், இணையத்தளத்திலும் வெளியிட உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவின்படி அவை அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டன. அமெரிக்க நீதிமன்றத்தில் அவர் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு இந்த அறிவிப்பு மூலம் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

ராஜபக்ச மீது இது போன்ற ஏராளமான வழக்குகள் தொடரப்பட்டு அவருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும், இப்போதுதான் முதல் முறையாக இப்படி ஓர் உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்து இருக்கிறது.

இனி எல்லா வழக்குகளிலுமே இதையே முன் உதாரணமாகக் காட்டி ராஜபக்சவுக்கு பகிரங்கமாக அழைப்பாணை வெளியிடக் கோரப்போகிறோம். அவற்றுக்கு ராஜபக்ச பதில் சொல்லியே ஆக வேண்டும்! என்கிறார்கள் பாதிக்கப்பட்டவர்கள்.

அமெரிக்க நீதிமன்றம் போட்ட கிடுக்கிப்பிடி உத்தரவு, ராஜபக்சவின் பதவிக்கே ஆப்பு வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!

## பிரிட்டனின் பாதுகாப்புச் செயலர்.......................

பொ.்.க்ஸ் அவர்கள் பிரித்தானியாவில் உள்ள பணக்கார தமிழர்களை மட்டும் தனக்கு அறிமுகப்படுதுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். வெளிப்படையாகவே இவர் இவ்வாறு கூறியது தன்னை பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுமட்டுமல்லாமல் 7378 பிரித்தானிய பவுன்களை இலங்கை மேம்பாட்டு அறக்கட்டளையிடம் தான் பெற்றுக்கொண்டதாகவும் அவர் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதுமட்டுமல்லாது இலங்கையில் ஒரு கம்பெனியைத் திறந்து அதனூடாக பணம் படைத்த லண்டன் தமிழர்களை இணைத்து அதனை மேம்மபடுத்த லியாம் பொ.்.க்ஸ் முயன்றுள்ளார். அவர் இதற்கு கருவியாகப் பாவித்தது இலங்கையில் உள்ள தமிழர் பிரச்சனையை.தமிழர் . பிரச்சனையில் தாம் தலையிடுவது .போல இவர் நடித்து பல பணம் படைத்த தமிழர்களை இவர் சந்தித்துள்ளார். ஆனால் அவர்களோடு பேசும் போது இலங்கை நிலைகுறித்தோ இல்லை மனித உரிமை மேம்பாடு குறித்தோ இவர் பேசுவதே இல்லையாம். இவர் பேசுவது எல்லாம் பணம் பற்றித்தான்.

இவ்வாறு டாக்டர் ஸ்ரீவாசன் இக் குற்றச்சாட்டுகளை நேரடியாகவே தெரிவித்துள்ளார். இலங்கையில் சில நிறுவனங்களை திறப்பதன் மூலம் நாம் பெரும் பணத்தை சம்பாதிக்க எதிர்பார்க்கிறோம், அதாவது பெரும் பணம் என்று அடித்துக் கூறியுள்ளார் லியாம் பொ.்.க்ஸ். இவற்றையெல்லாம் எதையும் மறைக்காமல் திரு ஸ்ரீ-வாசன் தெரிவித்துள்ளார்.

## இவ்வளவு கொடுமைகளையும் பார்த்த பின்.......................

காணிபூமியுடன் வளமாக வாழ்ந்தவர்கள். அவர்களின் வாரிசுகளுக்கு தங்கள் காணி எங்கிருக்கின்றது என்பதே தெரியாது. அத்துடன் யுத்தத்தில் உயிரைக் கையில் பிடித்து ஓடியவர்கள் தங்களது காணி உறுதிகளைத் தொலைத்துள்ளனர். இந்தியாவிலிருந்து ஒருலட்சத்திற்கும் அதிகமானவர்கள் வரவிருக்கின்றனர். அவர்களது காணிகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறது இந்த அரசாங்கம்? இந்த நேரத்தில் இத்தகைய பதிவுகள் தவிர்க்கப்படவேண்டும் எனவும் கூறினார்.

## இலண்டனில் தயார் நிலையில் 200 மனித ........................

தீவிர மதவாதிகளில் இருந்தே 200 க்கும் மேற்பட்ட மனித வெடிகுண்டுகள் உருவாகியுள்ளதாக நம்பப்படுகின்றது.இதனை அரசின் இரகசிய அறிக்கை ஒன்று உறுதிப்படுத்துகின்றது. தாக்குதல் இடம்பெற்றால் பொதுமக்களின் பாதுகாப்பு, ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடங்களின் பாதுகாப்பு குறித்து புலனாய்வுத் துறையினர் கவலை அடைந்துள்ளனர்.தீவிரவாதிகள் எனச் சந்தேகப்படுவோரைச் சுட்டுக் கொல்லுதல், புலனாய்வு நடவடிக்கைகளை முடுக்கி விடுவதன் மூலம் குறித்த ஆபத்துக்களை தவிர்க்க முடியும் என ஒரு சாரார் கருத்துத் தெரிவித்துள்ளனர். லண்டனில் தொடர் தாக்குதல்கள் இடம்பெறக் கூடும் என்று புலனாய்வுத் துறையினர் கூறியதாக விக்கிலீக்ஸ் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தவருடம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 70 க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளும் விடுதலையின் பின்னர் சரியாக கண்காணிக்கப்படவில்லையாம்.

## போர்க்குற்றங்கள் தொடர்பில்: புதிய சாட்சி

### ஒளிபரப்பியது அவுஸ்திரேலிய தேசிய தொலைக்காட்சி!

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது சிறிலங்கா படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும்மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவுஸ்திரேலியதேசிய தொலைக்காட்சியான ABC செய்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அந்நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இச்செய்தி (18.10.11) வெளியிடப்பட்டுள்ளது.

இச்செய்தியில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது சிறிலங்கா படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்ற திருமதி மீனா கிருஸ்ணமூர்த்தியின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போதான அனுபவங்களை திருமதி மீனா கிருஸ்ணமூர்த்தி தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா படைத்தரப்பினர் வைத்தியசாலைகளை இலக்கு வைத்து மேற்கொண்ட தாக்குதல்கள் குறித்தும், சிறிலங்கா கடற்படையினர் பொது மக்களை இலக்கு வைத்து மேற்கொண்ட பீரங்கித் தாக்குதல்கள் தொடர்பிலும் இவர் தனது சாட்சியத்தில் பதிவு செய்துள்ளார்.

சுமார் 9 நிமிடம் ஒளிபரப்பப்பட்ட இச்செய்தியில் அவுஸ்திரேலியாவில் மூன்று பேருக்கு எதிராக போர்க்குற்ற வழக்குத் தொடுக்க திருமதி மீனா கிருஸ்ணமூர்த்தியுடன் இணைந்து மருத்துவர் சாம்பவியும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் முன்னாள் கடற்படைத் தளபதியும், தற்போதைய அவுஸ்திரேலியாவுக்கான சிறிலங்காத் தூதுவராகப் பணியாற்றுகின்ற அட்மிரல் திசார சமரசிங்க, இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய இரட்டைக் குடியுரிமை பெற்ற ஐக்கிய நாடுகள் சபைக்கான சிறிலங்காவின் நிரந்திர வதிவிடப் பிரதிநிதி பாலித்த ஹோகன்ன மற்றும் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவுஸ்திரேலியாவுக்கு செல்லவுள்ள சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக திருமதி மீனா கிருஸ்ணமூர்த்தி அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ள அவுஸ்திரேலிய சமஷ்டி பொலிஸார் இம்முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து அவுஸ்திரேலியாவின் தேசிய தொலைக்காட்சியான யுடீஊ நேற்று வெளியிட்டுள்ள செய்தியில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது சிறிலங்கா படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சுடர் ஒளி சிறு விளம்பரங்கள்

## CLASSIFIEDS

PHONE : 020 70788870
FAX : 020 78998559

### Shop For Sale

CHICKEN & PIZZA Shop for sale in Edgwear ( HA8)
Sales £2000- £2500 Per week
Rent £13000, Rates £2200
Asking Price £65,000 Negotible
Quick Sale Needed.
Mob:07723 467 012 ,07983 589 993

### கடை விற்பனைக்கு

North London இல்
Off Licence Grocery Shop
விற்பனைக்குள்ளது
மேலதிக விபரங்களுக்கு
உடன்தொடர்பு கொள்ளவும் :
Kugan : 0208346 1003

### SUDAR OLI (ORDER)

SUBSCRIPTION
3 MONTHS £15.00
6 MONTHS £ 25.00
Y YEAR £ 35.00

### HOUSE FOR SALE

வெள்ளவத்தை சந்திக்கு அருகாமையில் (PamanKada lane) 3 அறைகொண்ட வீடு விற்பனைக்கு உண்டு மேலதிக விபரங்களிற்கு

07791 644 725

### சோதிட சேவை

SRI DURGA MATHA JOYTHISHYA MANDIR
உங்களின் சகல விதமான சோதிட தேவைகளை நிறைவேற்றுவதற்கு உடன் அழையுங்கள்
07506 659 050
07930 405 025

FASHION MARK
(OPPOSITE OF ILOYDS TSB NANK)
253 NORTHOLT ROAD,
SOUTH HARROW
HA 2 8HS
Open 9.30 am - 7.00 ppm
(7 days a week)

### விளம்பர சேவை

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய £10 மட்டுமே

### SPECIALISTS IN GENERAL CONSTRUCTION

We undertake and offer skills in the following

* New Central Heating and Boiler Repairing
* New Electrical Wiring
* Plastering and Roofing
* Painting and Decorating
* New Kitchen and Bathrooms
* Garden Landscaping

Contact -J.K.S Kuman
(079 4095 5313,074 3888 6064)

### திருமண விளம்பரம்

இலவச திருமண விளம்பர சேவைக்கு
தொடர்பு கொள்ளவும் :
info@sudaroli.co.uk




## கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இன்னிசை நிகழ்வு

எதிர்வரும் நவம்பர் 5ம் திகதி இந்திய இசைக் கலைஞர்களின் மாபெரும் இன்னிசை நிகழ்வு கரவெட்டி லண்டனில் கிளை அபிவிருத்தி ஒன்றியம் சார்பில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 20க்கு மேற்பட்ட இந்திய இசைக் கலைஞர்களின் இந நிகழ்வு 1400 இருக்கைகள் கொண்ட றயவகழசன உழடழளளநரअ என்ற மண்டபத்தில் பிரமாண்டமாக நிகழ்த்தப்படவுள்ளது. இந் நிகழ்வினூடாகத் திரட்டப்படும் பணம் கரவெட்டியில் நல்லதொரு காரியத்துக்குப் பயன்படுத்தப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# யாழ்ப்பாண கலாசாரம் சீரழிகிறது ?.......



யாழ்ப்பாண கலாசாரம் சீரழிகிறது! தடம் மாறும் யாழ்ப்பாண கலாசாரம்! இத்தகைய தலைப்புகளில் பல்லேறு கட்டுரைகளை இணையங்களில் காணமுடிகிறது.அதை பல்வேறு பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் மீள் பிரசுரம் செய்தும் வருகின்றன.யாழ்ப்பாணம் பற்றிய இன்றைய முக்கிய செய்தியாக பாரபரப்பாக போய்க்கொண்டிருக்கிறது.

பலரும் படித்து கேலியும் கிண்டலுமாக அபிப்பிராயம் முன்வைப்பதும் நடக்கிறது. போரினால் அடைபட்டுக்கிடந்தவர்களுக்கு சுதந்திரம் வந்ததும் இப்படி தவறாக பயன்படுத்துகின்றனர் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.இதில் முக்கியமாக எடுத்தாளப்பட்டவை இளைஞர்களின் காதல் விவகாரம், கருக்கலைப்பு, பெண்களின்ஆடைகள், இளைஞர்களின் களியாட்டங்கள் என்பனவே. இதெல்லாம் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இருக்கிறது. அதனால் இது ஒன்றும் புதிதில்லை. யாழ்ப்பாணம் ஒன்றும் புனித பூமியில்லை என்று சொல்வோரின் கருத்துக்களையும் நாம் இங்கு கவனத்தில் எடுக்கிறோம். கனகி புராணம் (மாவிட்டபுர தேவதாசி மீது நட்டுவச்சுப்பையனார் படிய படல்) கலாசாரமும் யாழ்ப்பாணத்திற்கேஉரியது.

அதேநேரம் இன்றைய நவீன ஊடகங்களின் வருகையும் இதை பூதாகரமாக்கியுள்ளது என்பதும் உண்மைதான். யாழ்ப்பாண கலாசாரம் மீது ஆழ்ந்த கரிசனை கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகளாக இவை தெரியவில்லை. போரின் கோரக்கைகள் சிதைத்து தள்ளிய மனிதர்கள் வாழும் யாழ்ப்பாணமும் வன்னியும் உங்கள் யாழ்ப்பாண கலாசாரத்துக்குள் அடங்கியிருக்கிறது.

ஒரு நீண்ட யுத்தத்திற்கு பின்னால் உருக்குலைந்துள்ள சமூகத்தை எப்படி நோக்க வேண்டும் என்ற பொதுப்புத்தியுடன் நாம் நடக்கிறோமா? ஒருஊடகவியலாளர் என்ற ரீதியில்இத்தகைய கட்டுரைகளுக்க பின்னால் எமக்கு இருக்கக்கூடிய நோக்கு என்ன?இந்த விடயங்களை சிந்திக்காமல் யார்மீது வன்மம் தீரக இத்தகைய கட்டுரைகள்? காதலர்களின் சல்லாபம் இளம் பெண்களின் கருக்கலைப்பு குடி கும்மாளம் பெண்களின் ஆடை இவைகள் பற்றித்தான் அதிகமாகப் பேசப்படுகின்றன. காதலர்களின் சல்லாபமும் இளம்பெண்களின் கருக்கலைப்புபற்றியும் எழுதும் போது பெருமளவில் பெண்கள் மீதான கோபமும் கீழ்தரமான பார்வையும்தான் கட்டுரைகளில் விஞ்சிநிற்கிறது. ஆண் பெண் வீதியில்நின்று கதைத்தாலே கலாசார சீரழிவு என்று பேசிய சமூகம் பின்னாளில் ஆணும் பெண்ணும் பொதுதளத்தில் வேலை செய்ய இறங்கியபோது வாய் மூடி மௌனமானது மட்டுமல்லாமல் ஆண் பெண் சேர்ந்து பேச சமூகத்தில் எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன என ஒத்துக்கொண்டது.இன்று ஆண் பெண்ணை ஒரு இடத்தில் பார்த்தால் ஐயோ..ஐயோ. கலாசாரம் சீரழியுது..என்ற கூச்சல்.

இந்தியாவில் விடுதலைப் போராட்டத்தில் தீவீரமாக ஈடுபட்ட பெண்களை அங்கு சுதந்திரம் கிடைத்தபின் சரி இனி நீங்கள் உங்கள் வீடுகளில் போய் வேலைபாருங்கள் என்றனராம்.பொது வேலைக்காக தங்கள் வாழ்க்கையை 10,20 வருடங்கள் அல்லது அதற்கும் மேலாக அர்ப்பணித்த அவர்கள் பொது தளத்தில் ஊடாடிய அவர்களுக்கு அந்த பொது தளத்தில் வாழ்வாற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

வீடுகளில் குடும்ப அலகையும் அமைக்க முடியாத அந்த பெண்களுக் பொது தளத்தில் வேலைகளை உருவாக்கி கொடுக்க வேண்டிய பொறுப்பு சமூகத்தினுடையது.இந்த அனுபவம் எங்களுக்கும் இருத்ககிறது. சிறைகளிலும் விடுதலையானோரும் அங்கஙகளை இழந்தோரும் தங்கள் வாழ்வாதாரங்களைத் தேடி கையறு நிலையில் நிற்கின்றனர். அவர்களுக்கான ஆற்றுப்படுத்தலை எப்படி நாம் முன்வைக்க போகிறோம்? வர்கள் ஒரு புறம் இருக்க இந்த போருக்குள் பிறந்து சிறுபராயத்தை தெலைத்து மொட்டவிழும் காலத்தினுள் இருக்கும் நம் இளைஞர் கூட்டம் இப்போது கொஞ்சம் பயமின்றி நடமாட தலைப்பட்டுள்ளனர்.

அவர்களின் அந்த மனத்தளவிலான சுதந்திரத்தில் முக்கியமாக இருப்பது வீட்டுக்கு வெளியில் நண்பர்களுடன் அளவளாவுதல் இதில் காதல் ஒன்றும் புதிதல்ல.தனிநபர் உணர்வுகளை சமூகத்தில் வெளிப்படுத்துவது பற்றிய அறிதலை முழுமையாக இழந்தவர்கள் அவர்கள்.சமூகத்தின் ஒரு அங்கமாக தம்மைநினைப்பதைவிட தனிநபர்களாகவே தம்மை காத்துக்கொண்டவர்கள். அவர்களின் செயற்பாடுகள் மிகச்சுதந்திரமானதாக இருக்கும்.ஆனால் காலம் இடம் அறிந்த இங்கிதங்களை அவர்கள் முற்றாக இழந்தவர்களல்ல. கோயில்களை அசிக்கப்படுத்தும் காம ஜோடிகள் என்ற ஒரு கட்டுரையும் பார்த்தேன்.அது புதுமைப்பித்தனின் பொன்னகரமாக கூட இருக்கலாம். பாலியல் தொழில் அதிகரித்திருப்பதாகவும் சில கட்டுரைகள் கூறின.இதை எல்லாவற்றையும் ஒட்டுமொத்த யாழ்ப்பாண கலாசார சீரழிவுக்கான அசிங்கங்களாக பார்க்காமல் இந்த நிலைகளுக்கான பின்புலம் பற்றிய அறிதலில் இருந்து புதிய நிலைகளை எதிர்கொள்ளவேண்டும் என நினைக்கிறேன்.

ஏற்கனவே தமிழ் சமூகத்தில் ஆண்களின் தொகையை விட பெண்களின் தொகை விகிதாசாரப்படி மிக அதிகமாக உள்ள நிலையை ஆய்வொன்றின் மூலம் முன்வைத்திருந்தேன் அதில் குறிப்பிட்டது போல் தமிழ் சமூகத்தில் கலாசார மீள் கட்டுமானம் அவசியம் என்பதை மீண்டும் முன்வைக் விரும்புகிறேன்.2000 ஆண்டு சுமைகளுடன் இன்னும் ஓட முனைந்தால் அழிவுதான் மிஞ்சும்.மீட்டெடுத்தல் என்பது கூட கலாசாரத்திற்கு பொருந்தாது. காலசாரம் என்பது - அதன் எல்லா கூறுகளும் - ஓடாத குட்டை நீரல்ல.

எம்.எஸ்.ரி.கௌரி

# தமிழ் மாணவர்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்துக

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை!

யாழ். பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர் இனம் தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டதைக் கண்டித்து யாழ். பல்கலைக்ககழ மாணவர் சமூகம் பாரிய ஆர்பாட்டம் ஒன்றை இன்று திங்கள் கிழமை மேற்கொண்டது.இந்த ஆர்பாட்டத்தில் பல்கலைக்கழக மாணவர் மீதான தாக்குதலைக் கண்டித்தும் இலங்கை அரசின் தமிழ் மாணவர் சமூகம் மீதான வன்முறையைக் கண்டித்தும் ஆர்பாட்டம் நடத்தினர்.மாணவர்கள் மீது ஏவி விடப்படும் வன்முறைகளை நிறுத்துமாறு கோரி மாணவர்கள் உரிமை முழக்கம் விட்டனர். கொட்டும் மழைகளுக்கு மத்தியில் தங்களது ஆர்பாட்டத்தை உணர்வுபூர்வமாக நடத்தினர்.

இதன்போது இத்தாக்குதலை கண்டித்து யாழ் பலகலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கை இதோ

இலங்கை அரசு தமிழ் பேசும் மாணவர்களின் மீது அடக்கு முறைகளை அன்றைய காலகட்டங்களில் தரப்படுத்தல்களில் இருந்து ஆரம்பித்து பின்னர் அவை படுகொலை என்ற வடிவத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இன்று எமது இனத்திற்கான தனித்துவ கலாசாரங்களை அழித்தும் இனந்தெரியாத தாக்குதல்கள் என்ற போர்வையிலும் தமிழ் மாணவர்கள் மீதான அடக்குமுறைகளை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

எமது பல்கலைக்கழகம் ஆனது தமிழ் பேசும் மக்களால் என்றும் உயர்ந்த இடமாக பார்க்கப்படுவதுடன் இன்றுவரை தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரலாக உலகம் எங்கும் வியாபித்து நிற்கின்ற அதேவேளை எங்கள் உரிமைக்குரலை நசுக்குவதற்கு கடந்த பல வருடங்களாக இலங்கை அரசு முயன்று வருகின்றன இது உலகத்திற்கே தெரிந்த உண்மை. அதன் ஒரு அங்கமாகவே இன்று எமது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் காடையர்களால் காட்டுமிராண்டித்தாக தாக்கப்பட்டுள்ளார் எமது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆனது இன்றுவரை எமது மாணவர்களை மட்டுமன்றி அணைத்து தமிழ் பேசும் மக்களையும் வழிநடாத்தி சென்றுகொண்டிருக்கின்றது.இந்த உயரிய இடத்தினை பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எத்தனையோ விலைமதிப்பில்லா உயிர் தியாகங்கள் மற்றும் எம் ஒவ்வொருவரினதும் இனப்பற்றின் ஊடாகவே அடைந்தோம்.

இந்த உயரிய இடத்தில் இருக்கும் எமது மாணவ ஒன்றிய தலைவருக்கு 16-10-2011 ஞாயிறு மதியம் 1-30 மணியளவில் யாழ் பழம் வீதியில் உள்ள சிறீலங்கா படையினரின் காவலரனில் இருந்து சுமார் 50 மீட்டர் அருகில் வைத்து இனந்தெரியாத நபர்கள் என்று அழைக்கபடும்அதேவேளை எமது மக்களால் கௌரவமாக இனந்தெரிந்த நபர்கள் என அழைக்கபடுவோரால் கோழைத்தனமாக தாக்கப்பட்டுள்ளார் .இந்த கோழைத்தனமான தாக்குதலானது நாங்கள் எங்கே வேண்டுமானாலும் எப்போதும் உங்களை தாக்குவோம் உங்களிற்கு கேட்பதற்கு யாரும் இல்லை என்ற ஓர் செய்தியை தமிழ் பேசும் மக்களாகிய எங்கள் எல்லோருக்கும் சொல்லி செல்கின்றது.இதற்கு தமிழ் பேசும் மக்களாகிய நாம் என்ன பதில் சொல்ல போகின்றோம். எங்கள் அமைதியை சிலர் தமக்கு சாதகமாக பயன்படுத்தி அதில் குளிர் காய எண்ணுகின்றனர். பட்டப்பகலில் நடந்த இந்த சம்பவங்களில் இருந்து சர்வதேச சமூகம் நாங்கள் எவ்வாறான நிலைமைகளில் இருந்து கொண்டிருக்கின்றோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எமது பல்கலைகழத்திற்கு பெரும்பான்மை இன மாணவர்களின் வரவு இன்று அதிகரித்துள்ள வேளையில் தமிழ் மாணவர்களின் தலைமைத்துவத்தை விரும்பாத சில தீய சக்திகளின் செயற்பாடே இந்த தாக்குதலாகும்.இது போன்ற காட்டுமிராண்டி தாக்குதல்களை நடாத்துபவர்களை நாம் உடனடியாக இனங்கான வேண்டும். அவர்களை சட்டங்களிற்கு முன் நிறுத்தவேண்டும். யாழ் பல்கலைக்கழக மாணவ சமூகமாகிய நாம் மாணவ அடக்கு முறைகளிற்கு எதிராக முக்கிய சில கோரிக்கைளை முன்வைத்து அகிம்சை வழியில் கிளர்ந்தெழ ஆயத்தமாக உள்ளோம்.

1.ஒவ்வொரு தமிழ் மாணவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
2.மாணவ ஒன்றி தலைவரினை தாக்கியவர்களை உடன் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.
3.மாணவர் ஒன்றிய தலைவருக்கு தாக்குதல் நடாத்தப்பட்ட இடத்திற்கு அருகில் சிறீலங்கா படைகளின் காவலரன் உள்ளது எமது பாதுகாப்பிற்கு இல்லாத அது போன்ற பாடசாலை மற்றும் எமது பல்கலைக்கழகத்திற்கு மற்றும் மக்கள் செறிந்து வாழும் இடங்களிற்கு காவலரங்களை உடனே அகற்ற வேண்டும்.
4.மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளிற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.
5.மாணவர்களின் தனித்தவமான செயற்பாடுகளில் இனந்தெரியாதோர் என அழைக்கப்படவோர் தலையிடுவது நிறுத்தப்பட வேண்டும்.
6.மாணவர்களாகிய நாம் எங்கு செல்லவும் அனுமதியளிக்கப்பட வேண்டும்.

கோரிக்கைகளை வெற்று கோரிக்கைகளாக நாம் தெரிவிக்கவில்லை. அதனூடாக நாம் எமது அணைத்து தமிழ் பேசும் மாணாவர்களின் உரிமைகளாகவே தெரிவித்து கொள்கின்றோம். எங்கள் மாணவ உரிமை கோரிக்கைகளை நிலைநிறுத்தம் வரை நாங்கள் எங்கள் விரிவுரைகளை நிறுதியுள்ளோம். எனவே எங்கள் கோரிக்கைகளை விரைவாக செயற்படுத்தி அதற்கு தீர்வு வழங்குவதன் மூலம் கற்றலை சிறப்பாக முன்னெடுத்து செல்ல உதவிடுமாறு விரைவாக கேட்டுக்கொள்கின்றோம். இதற்கு விரைவான தீர்வினை பெறுவதற்கு எங்களுடன் எல்லா பாடசாலைகள் உயர் கல்விக்கூடங்கள் மற்றும் எங்கள் தமிழ் தேசத்தின் சமூக அமைப்பக்கள் ஒவ்வொன்றையும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம் நாங்கள் அணைவரும் விரைவாக ஒன்றிணைவதன் மூலம் எங்கள் பலத்தினை நிருபிப்போம். நாங்கள் அணைவரும் ஒன்றிணைவதன் மூலம் எங்கள் உரிமைகளை ஒவ்வொன்றாக பெற்றுக்கொள்வோம். நாம் அணைவரும் ஒன்றுபட வேண்டிய காலம் எங்கள் முன் கணிந்துள்ளது. அதை நாம் சரி வர பயன்படுத்துவதன் மூலம் எமது இலக்குகளை விரைவு படுத்துவோம்.

நன்றி மாணவர் ஒன்றியம் யாழ் பல்கலைக்கழகம்

# தாயகச் சுடர்

## இலங்கை விவகாரத்தினால் பொறுமையிழந்த பாண் கீன் மூன்

### இலங்கைக்கு எதிராக தொடரும் சர்வதேச நெருக்கடிகள்



இலங்கை அரசின் நடவடிக்கையிலும் இலங்கையில் இறுதி யுத்தத்தில் நடந்த சம்பவங்களிலும் நான் பொறுமை இழந்துள்ளேன் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி மூன் தெரிவித்தார். நோர்வேயில் கடந்த திங்கள்கிழமை ஆரம்பமான உலகில் அனைவருக்கும் 2030ஆம் ஆண்டுக்கிடையில் மின்சாரம் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக வந்தபோது விசேடமாக தெரிவு செய்யப்பட்ட சர்வதேச பத்திரிகையாளர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் போது இலங்கை தொடர்பாக நீண்ட நெடு நேரம் கருத்து தெரிவித்த ஐ.நா பொதுச் செயலாளர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை விடயத்தில் நான் ஒரு விசேட நிபுணர் குழுவை அமைத்திருந்தேன். உங்களுக்கு நினைவிருக்கும். அவர்கள் அனைத்தையும் நன்கு கவனத்தில் எடுத்து பல பரிந்துரைகளை தெரிவித்திருந்தார்கள். எனது நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ள விடயங்கள் நிச்சயமாக இலங்கை மக்களால் அமுல்படுத்தபட்டிருக்க வேண்டும். நான், இலங்கை அரசாங்கம் எனது நிபுணர் குழு அறிக்கைக்கு சாதகமான பதிலை தரும் என்று நீண்ட நெடும்காலம் காத்திருந்தேன். அதுபோல் அவர்கள் எனது நிபுணர் குழு அறிக்கையை அமுல்படுத்துவார்கள் என்வும் காத்திருந்தேன்.சில வாரங்களுக்கு முதல் நான் எனது நிபுணர் குழு அறிக்கையை மனித உரிமை கவுன்சிலுக்கும் ஐ.நாவின் மனித உரிமை செயலாளர் நாயகத்திற்கும் பரிசீலினைக்கு உட்படுத்துமாறு அனுப்பி வைத்திருந்தேன்.

இலங்கை நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை 02 வாரங்களுக்கு முதல் ஐ.நா கூட்டத்தொடருக்கு அவர் வந்த போது, நான் சந்தித்து கலந்துரையாடி இருந்தேன். இவ்விடயங்கள் தொடர்பாகவும் அவருடன் கலந்துரையாடி இருந்தேன். அவர் எனக்கு, இலங்கை தமிழ் மக்களையும் அவர்களின் மனித உரிமைகளையும் பாதுகாப்பதாகவும் அதற்கு இலங்கைக்குள் அனைத்து நடவடிக்கையையும் எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார் என ஐ.நாவின் செயலாளர் நாயகம் மிகவும் விரக்தியுடன் தெரிவித்திருந்தார்.

## நோர்வேயுடன் நெருங்கிச் செல்ல முயற்சிக்கும் இலங்கை :

### நோர்வேயின் போர் அறிக்கை விரைவில் வெளிவரும்.

இலங்கையின் அமைதி முயற்சியில் ஏற்பட்ட பின்னடைவு மற்றும் போருக்கான காரணங்களை விளக்கி நோர்வே அரசு, அவற்றை விசேட அறிக்கையாக வெளியிடவுள்ள நிலையில், அதனை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்காக நோர்வே அரசுடன் இலங்கை அரசு இராஜதந்திர மட்டத்திலான காய்நகர்த்தல்களை முன்னெடுத்துள்ளது எனத் தெரியவருகிறது. நோர்வே அரசுடன் நேரடியாக தொடர்புபட்ட அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று ,ந்த விடயங்கள் குறித்த ஆய்வுப் பணிகளை முன்னெடுத்தது என்றும், அந்த அறிக்கை ஓரிரு வாரங்களில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நோர்வே சென்றுள்ள இலங்கைக் குழு அந்நாட்டு முக்கியஸ்தர்களுடன்பிரஸ்தாப அறிக்கை தொடர்பில் விரிவாக கலந்துரையாடியு உள்ளதாகவும் தெரியவருகிறது.

இலங்கை அரசுக்கு சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துக் காணப்படும் இந்தகாலகட்டத்தில் நோர்வே வெளியிடவுள்ள இந்த அறிக்கையானது மேலும் பல வழிகளில் சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரிய சீன பிரஜை விடுதலை

விசா அனுமதிகாலம் முடிவடைந்தும், இலங்கையில் தங்கிருந்த பென் சூங் என்ற சீனப் பிரஜையை விடுதலை செய்யுமாறு கொழும்பு. கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

இந்த சீன பிரஜை இலங்கையில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தில் தன்னை அகதியாக பதிவுசெய்துக்கொண்டுள்ளார். இதன் காரணமாகவே அவரை விடுதலை செய்யுமாறு நீதவான் நேற்று (17) உத்தரவிட்டுள்ளார்.குடிவரவு குடியல்வு திணைக்களம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சான்றிதழுக்கு அமைய குறித்த சீன பிரஜை கடந்த 31 மாதம் 31 ஆம் திகதி வரை விசா அனுமதியின்றி இலங்கையில் தங்கியிருந்துள்ளார்.

இந்த நிலையில், சீன பிரஜை அகதியாக பதிவுசெய்துள்ளதால், அவரை விடுவிப்பதாக நீதவான் கூறியுள்ளார்.

## பட்ஜெட் 2012; கோத்தாபயவுக்கு 22944 கோடி பசிலுக்கு 10357 கோடி ஒதுக்கீடு

இலங்கை அரசாங்கத்தின் 2012 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், அதிகளவான நிதி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பொறுப்பின் கீழும், அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ செயலாளராக பணியாற்றும், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த அமைச்சுக்காக 22 ஆயிரத்து 944 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நாளை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட உள்ள வரவு செலவுத் திட்டம் தொடர்பான மதிப்பீட்டுச் சட்டமூலத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை தவிர அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு 10 ஆயிரத்து 357 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் 21 ஆம் திகதி 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிதமியமைச்சரான ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் சமர்பிக்க உள்ளார்

## இலங்கைக்கு மேலும் ஒரு தலையிடி :

### இறுதிப்போர் கொடூரங்கள் குறித்து அவுஸரேலிய காவல்துறை ஆராய்வு

இலங்கையில் நடந்து முடிந்த இறுதிப் போரின் கடைசிக் கட்டத்தில் அரச படையினர் பொதுமக்கள் மீது குண்டுகளையும் எறிகணைகளையும் வீசிக் கொடூரங்கள் புரிந்துள்ளார்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் அறிக்கை ஒன்று அவுஸ்திரேலிய காவற்துறையினருக்குக் கிடைத்துள்ளது. நேற்று முதல் அந்த அறிக்கையை அவர்கள் ஆராய ஆரம்பித்துள்ளனர்.

இந்த அறிக்கையை சர்வதேச சட்டவல்லுநர்களின் அவுஸ்திரேலியக் கிளை தயாரித்துள்ளது. தற்போழுது அவுஸ்திரேலியாவில் வசித்துவரும் இலங்கையர்களிடமிருந்துசேகரிக்கப்பட்ட வாக்குமூலங்களைக் கொண்டதாக இந்த அறிக்கை காணப்படுகின்றது. அதில் பலர் இலங்கை அரச படையினரால் தாங்கள் தாக்கப்பட்டனர் என வாக்குமூலம் அளித்துள்ளனர்.

அறிக்கையில் காணப்படும் விடயங்கள் குறித்துக் கருத்து வெளியிட்ட சர்வதேச சட்டவல்லுநர்களின் அவுஸ்திரேலியக் கிளையின் தலைவர் ஜோன் தவுத், சம்பவங்களை நேரில் பார்த்தவர்களின் வாக்குமூலங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. பொதுமக்கள் மீது குண்டுகள் வீசப்படுவது, குறிப்பாக, அரசு அறிவித்த பாதுகாப்பு வலயங்கள் மீது எறிகணைகள் வீசப்படுவது மற்றும் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட முழு அளவிலான தொடர் தாக்குதல்கள் பற்றிய விவரம் இதில் அடங்கியுள்ளது. இது முற்றுமுழுதாக இலங்கை அரசு தெரிவித்து வரும் கருத்துக்களுக்கு மாறானதாகும்

## முல்லைத்தீவுடன் இணையும் வெலிஓயா

### சிங்களக் குடியேற்றங்களை தமிழர் பிரதேசங்களுடன் இணைக்கும் அரசு:

புதிய நிர்வாக மாற்றத்தின்படி வெலிஓயா என்ற மணலாறு பிரதேச செயலகப் பிரிவு, அநுராதபுர நிர்வாகத்தில் இருந்து முல்லைத்தீவின் நிர்வாகத்துக்கு கீழ் மாற்றப்பட்டுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகளை மீளமைக்கும் திட்டத்தின் கீழ் இது மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவின் நிர்வாகம் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை புதிய மாவட்டங்கள் எவையும் உருவாக்கப்படமாட்டாது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் வவுனியாவில் மேலும் இரண்டு புதிய பிரதேச செயலகங்களை ஏற்படுத்துமாறு தாம் கேட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி சார்ல்ஸ் தெரிவித்துள்ளார். அத்துடன் மட்டக்களப்பிலும் இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு மாநகரசபை குழப்பும் அரசு

கொழும்பு மாநகர சபை புதிய மேயர் தனது கடமைகளை பொறுப்பேற்பதை தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சி இன்று குற்றஞ்சாட்டியுள்ளது.நடைபெற்று முடிந்த தேர்தலில் கொழும்பு மாநகர சபையை ஐ.தே.க. கைப்பற்றியது. அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற ஏ.ஜே.எம். முஸம்மில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

பதவிப் பிரமானம் செய்தவுடன் முஸம்மில் தமது கடமைகளைப் பொறுப்பேற்க விரும்பியதாகவும் அதற்கு அரசாங்கம் தடை விதித்ததாக தெரிவித்துள்ள ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, கொழும்பு மாநகர சபை இன்னும் விசேட ஆணையாளரின் அதிகாரத்தின் கீழ் உள்ளது. இது பாரதூரமானதாகும் எனவும் கூறியுள்ளார்.

ரவி கருணாநாயக்க எம்.பியின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த பேசிய உள்ளூராட்சி பிரதியமைச்சர் இந்திக பண்டாரநாயக்க,இத்தகைய பிரச்சினை குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனவும் இத் தேர்தலில் மக்களின் அபிப்பிராயத்திற்கு அரசாங்கம் தலைவணங்குவதாகவும் கொழும்பு மாநகர சபையை ஐ.தே.க. எவ்வித பிரச்சினையுமின்றி நிரவகிக்க அரசாங்கம் உதவி செய்யும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை பொய்யான குற்றச்சாட்டுகள் முன்வைத்து ஐ.தே.கவின் பண்டாரவளை மாநகர சபை மேயரை அரசாங்கம் தொந்தரவுக்கு உள்ளாக்குவதாகவும் ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியதற்கு இது தொடர்பாக முறையான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டால் இவ்விடயத்தை ஆராய்ந்து பார்க்கத் தயார் எனவும் அமைச்சர் இந்திக பண்டாரநாயக்க பதிலளித்துள்ளார்.

# உலகச் சுடர்

## சிரிய அவலங்கள் தொடர்கின்றன

### மேற்குலக கயிற்றிலுப்புகளுக்குள் சிக்கித்தவிக்கும் அப்பாவி மக்கள்



சிரிய அதிபர் அல் அசாத்தை பதவி விலக கோரி, கடந்த 7 மாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வந்த ஆர்ப்பாட்ட பேரணிகளின் ஏற்பட்ட கலவரங்களில், உயிரிழந்தோர் எண்ணிக்கை 3000 ஐ எட்டியுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.


உயிரிழந்தோரில் குறைந்தது 187 சிறுவர்களும் அடங்குவார்கள் எனவும், கடந்த 10 நாட்களில் மாத்திரம், 100 ற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் ஐ.நா மனித உரிமை பணிப்பாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார். மேலும் சிரிய இராணுவத்தினால் இந்த இரக்கமற்ற அடக்குமுறை தொடருமாயின், நாட்டை முழுமையாக சேதப்படுத்தும் சிவில் யுத்தம் ஒன்று ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

எனினும் தீவிரவாத குழுக்களே, இக்கலவரங்களை ஊக்குவிப்பதாகவும், பாதுகாப்பு படையிலிருந்து 1,1000 பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாகவும், அரசு தரப்பு குற்றம் சுமத்தியுள்ளது.கடந்த வாரம், சிரியாவுக்கு எதிராக ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை சீனா மற்றும் ரஷ்யா தமது வீற்றோ அதிகாரத்தை பயன்படுத்தி நிராகரித்திருந்த போதும், அந்நாடுகளும் சிரிய அரசுக்கு அழுத்தம் கொடுத்திருந்தன. அசாத் அரசு மீதான பொறுமையை தாமும் இழந்து வருவதாகவும் அவை எச்சரித்திருந்தன.

சிரிய அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக கடந்த வாரம், பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, போர்த்துக்கல் ஆகிய நாடுகள் இணைந்து கண்டன தீர்மானம் ஒன்றை முன்வைத்தன.இத்தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு ஐ.நா பாதுகாப்பு சபை கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட போது, இத்தீர்மானத்துக்கு எதிராக ஐ.நா சபையின் நிரந்தர நாடுகளான சீனா, ரஷ்யா ஆகியன வீட்டோ எனும் விசேட மறுப்பாணையை பயன்படுத்தி, இத்தீர்மானத்தை நிராகரித்திருந்தன.இது குறித்து, ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் சூசன் ரைஸ் கண்டனம் வெளியிட்டதுடன், சிரிய பிரச்சினைக்கு ரஷ்யாவும், சீனாவும் தனது வீற்றோ அதிகாரத்தை பயன்படுத்தியது பேரவமானம் என தெரிவித்திருந்தார்.

லிபியாவுக்கு எதிராக ஐ.நா பாதுகாப்பு சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது எதிர்ப்பு தெரிவிக்காத சீனாவும், ரஷ்யாவும், சிரியாவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறதென்றால் அது, முஸ்லீம் நாடுகளில் ஜனநாயகத்தை நிறுத்த வேண்டும் என்பதற்காக அல்ல, சிரியாவில், இவ்விரு நாடுகளும் பாரிய முதலீடுகளை செய்திருக்கின்றன என்கிறார்கள் அரசியல் அவதானிகள். ஆனால் அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் சிரியா மீது ஏற்கனவே தனித்தனி பொருளாதர தடைகளை சுமத்தியிருப்பதும், தமது நலன்களுக்கு வளைந்துகொடுக்க கூடிய ஆட்சி ஒன்றை மற்றைய மத்திய கிழக்காசிய நாடுகளை போன்று சிரியாவிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் தான் எனவும் விமர்சனங்கள் உண்டு.

## ஒற்றை ராணுவ வீரருக்காக ஆயிரம் கைதிகளை விடுவிக்க சம்மதித்த இஸ்ரேயல்



காசா பகுதி ஹமாஸ் பிரிவினரிடம், கடந்த ஐந்து ஆண்டுகளாக சிக்கியுள்ள, தனது நாட்டு இளம் ராணுவ வீரர் ஒருவரை மீட்பதற்காக, பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகளை, இஸ்ரேல் விடுவிக்க சம்மதம் தெரிவித்துள்ளது. முதற்கட்டமாக, 477 கைதிகளின் பட்டியலை, அந்நாடு வெளியிட்டுள்ளது.கடந்த 2006 ஜூன் 25ம் தேதி, இஸ்ரேல்- காசா எல்லைப் பகுதியில், பூமியில் சுரங்கம் தோண்டி நுழைந்த ஹமாஸ் பிரிவினர், இஸ்ரேல் ராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தினர். இதில், இருதரப்பிலும் தலா இருவர் பலியாயினர்.

மூவர் காயம் அடைந்தனர். இஸ்ரேல் வீரர் கிலாத் ஷாலித் என்பவரை, ஹமாஸ் பிரிவினர் பிடித்துச் சென்றனர். அப்போது, ஷாலித்துக்கு 19 வயது.இதன் பின், அவரை விடுவிக்க, இஸ்ரேல் ஹமாசுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இஸ்ரேல் சிறையில் வைத்துள்ள ஒன்பதாயிரம் பாலஸ்தீனர்களை விடுவிக்க வேண்டும் என, ஹமாஸ் நிபந்தனை விதித்தது. இஸ்ரேல் மறுத்தது. இப்பிரச்னையில், எகிப்து நடுவராக இருந்து பேச்சுவார்த்தையை நடத்தியது.இறுதியில், "முதற்கட்டமாக 477 பேரை இஸ்ரேல் விடுவிக்க வேண்டும் அதற்குப் பதிலாக, இஸ்ரேல் வீரர் கிலாத் ஷாலித் விடுவிக்கப்படுவார். அதைத் தொடர்ந்து, மிச்சமுள்ள 550 பாலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட வேண்டும்" என, ஒப்பந்தம் தயாரானது.அதன்படி, நேற்று முதற்கட்டமாக விடுவிக்கப்பட வேண்டிய 477 பாலஸ்தீனக் கைதிகளின் பெயர்ப் பட்டியலை, இஸ்ரேல் வெளியிட்டது. இதை எதிர்ப்பவர்கள், பட்டியல் வெளியிடப்பட்ட 48 மணி நேரத்திற்குள், கோர்ட்டில் மனு தாக்கல் செய்ய வேண்டும்.

கைதிகளான பாலஸ்தீனர்கள், இஸ்ரேலில் பல பகுதிகளில், வெடிகுண்டு வீசி பயங்கரத் தாக்குதல் நடத்தியோர், தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியோர். இவர்களை விடுவித்தால், இஸ்ரேல் மீதான தாக்குதல் அதிகரிக்கும். இவர்களால் பலியான இஸ்ரேலியர்களுக்கு, அரசு என்ன பதில் சொல்லும்? எனக்கோரி, பாதிக்கப்பட்டோர் கூட்டமைப்பு மனு தாக்கல் செய்துள்ளது.எனினும், கோர்ட், அரசின் முடிவுக்கு எதிராக நிற்காது என்றே கருதப்படுகிறது. அதேநேரம், முக்கிய பயங்கரவாதிகளான மர்வான் பர்கவுட்டி, அப்துல்லா பர்கவுட்டி, அகமது சாதத் ஆகிய மூவரை விடுவிக்கப் போவதில்லை என, இஸ்ரேல் உறுதியளித்துள்ளது.

## பாக்.மாணவியர் மீது தாக்குதல்

### இஸ்லாம் கலாசாரத்தை மீறாது ஆடை அணியுமாறும் எச்சரிக்கை!!



கிஸ்தானின் முக்கிய நகரான ராவல்பிண்டியில் உள்ள பெண்கள் பாடசாலையொன்றில் நுழைந்த முகமூடி அணிந்த மர்ம நபர்கள் 60 பேர் அங்கு கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவியர் மற்றும் ஆசிரியைகளைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அப்பாடசாலையில் சுமார் 400 மாணவியர் கல்விகற்று வருவதுடன் 30க்கும் மேற்பட்ட ஆசிரியைகள் பணியாற்றி வருகின்றனர்.கடந்த 8ஆம் தேதி, முகமூடி அணிந்த 60 க்கும் மேற்பட்டோர், கைகளில் இரும்பு ஆயுதங்களுடன் பாடசாலையினுள் நுழைந்துள்ளனர். அங்கு மாணவியரும், ஆசிரியைகளும் ஆடம்பரமாக, இஸ்லாமிய கலாசாரத்தினை மீறி உடையணிந்து வருவதாக குற்றம்சாட்டிய அவர்கள், அனைவரையும் ஆயுதங்களால் அடித்தனர்.பின்னர் அனைவரும் "அடக்க ஒடுக்கமாக ஆடை அணிந்து வர வேண்டும். அனைவரும் தலையில் அணியும் "ஹிஜாப் "அணிய வேண்டும்"" என, மிரட்டியுள்ளனர். இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் அமைந்துள்ள பல பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜிம்பாப்வேயில் ஆண்களை கடத்தி 'கெடுத்த' 3 சகோதரிகள் கைது!



ஜிம்பாப்வேயில் ஆண்களை கடத்தி "கெடுத்த" 3 சகோதரிகள் கைது!

சிம்பாவ்வேயில் ஆண்களுக்கு மயக்க மருந்தை வழங்கி அவர்களைக் கடத்தி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி விந்தணுக்களை திருடிய குற்றச்சாட்டில் 3 பெண்களை அந்நாட்டுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கவேரு நகரில் வாகனமொன்றில் சென்ற வேளை இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களின் வாகனத்திலிருந்து உபயோகிப்பட்ட 33 கருத்தடை உறைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த பெண்கள் ஹரேரே மாஷோலைன்ட் மற்றும் குவேறு ஆகிய நகர்களில் தெருவில் செல்லும் ஆண்களை தமது வாகனத்தில் ஏற்றி அனுமதித்த பின் அவர்களை மயக்க மருந்து கொடுத்து தமது காரியத்தை சாதித்து வந்துள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரில் கோபி நகோவரா என்ற 26 வயது யுவதியும் உள்ளடங்குகிறார்.

ஆண்களைக் கடத்திச் சென்று வல்லுறவுக்கு உட்படத்திய குற்றச்சாட்டுக்கு மேலதிகமாக பாதசாரியொருவரை வாகனத்தால் மோதி அவர் பலியாவதற்கு காரணமாக இருந்தமை தொடர்பாக பிறிதொரு வழக்கும் பதிவாகியுள்ளது.

# தமிழ் இறைச்சிக்கடை EAST HAM ல்

355 High Street North, Manor Park, London E12 6PQ

Tel: 020 8548 1503 Mob: 079 0460 7186

open time 8.00 am to till midnight 1.00 am

பல ஆண்டுகள் அனுபவம் மிக்கவர்களால் கிழக்கு லண்டனில் தமிழர்களால் நடாத்தப்படும் ஒரே ஒரு மீன்/இறைச்சிக்கடை நாங்கள் Billingsgate மீன் சந்தையில் விற்கப்படும் விலையை விட மிகவும் மலிவு விலையிலே தருவித்து தருகின்றோம்.

உடனடி பங்கு இறைச்சி இடைக்கும் நாட்டுக்கோழி/மான் மற்றும் மரை இறைச்சிவகை உண்டு

அறுக்குளா மீன் மலிவு விலையில்







# BLJ Solicitors

Expert Confidential & independent advice.

BISHOP LLOYD AND JACKSON SOLICITORS,
PARK HOUSE,
111 UXBRIDGE ROAD,
EALING CITY,
W5 5LB, LONDON.
TEL: 020 8832 1162 FAX: 020 8832 1161.
DX: 5115 EALING Email: info@bljlaw.co.uk,

## 1. குடிவரவு சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனைகளுக்கு

நாங்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் குடியேறுதல் வேலைகளை செய்து முடிக்கிறோம்.

- Same day visa service just for £250
- All Tier-1 ( Post Study Work, Entrepreneur, Investor) Applications
- Tier-2 ( Work Permit) applications, extensions and appeals
- Tier-4 (Student) application, extensions and appeals.
- SPONSORSHIP LICENCE Application for employers
- Marriage and Dependent Application
- Family visitor and Entry clearance matters

## 2. நீங்கள் வாடகை வீட்டில் வசிப்பவரா ! அல்லது Council/Housing Accossiction வீட்டில் வசிப்பவரா ?

உங்கள் வீட்டு பராமரிப்பு சம்மந்தப்பட்ட கீழ்வரும் சட்ட ஆலோசனைகள்.

- ஈரம், பூச்சுக்காளான், காளான்
- வெள்ளம், அல்லது நீர் கசிவு
- எலிகளும்,பூச்சிகளும் பெருமளவில் நிரம்பியிருத்தல்
- பழுதான ஜன்னல்கள்,கதவுகள்,சுவர்கள்
- சூடான காற்று, சூடான தண்ணீர் குறைவாக வருவது
- மின் சுற்றில் உள்ள குறைபாடுகள் அல்லது அதில் ஏதாவது திருத்த வேலை சம்பந்தமான பிரச்சனைகள்

சில வேளை திருத்த வேலை செய்யப்படாவிடில் வீட்டுச்சொந்தக்காரரைக் கொண்டு தேவையான திருத்த வேலைகளை நாங்கள் செய்து முடிப்போம். இவைகள் உங்களது சட்டபூர்வமான உரிமை.


## 3. விவாகரத்து சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனைகள்

தயவுசெய்து கவனிக்கவும் நாங்கள் தனிப்பட்ட வாடிக்கையாளர்களை மட்டும் கருத்தில் கொள்ளவில்லை, அத்துடன் சட்டபூர்வமான உதவி வேலைகளையும் செய்கிறோம். ஆகவே சட்டபூர்வமான உதவிக்கு நீங்கள் தகுதியுடையவர்கள்என்றால் உங்களுக்கு எந்தவிதமான கட்டணமும் இல்லை.

# இந்திய சுடர்

## ஹஸாரேவுக்கு உச்ச நீதி மன்றம் அழைப்பாணை

ஊழலுக்கேதிராக போராடிய அன்ன ஹசாரேக்கு சொந்தமான அறக்கட்டளையில் நிதி முறைகேடு




அன்னா ஹஸாரேவுக்குச் சொந்தமான ஹிந்த் சுவராஜ் டிரஸ்ட் என்ற அறக்கட்டளையில் நடந்த நிதி முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்தக் கோரி தொடரப்பட்டுள்ள வழக்கில் விளக்கம் அளிக்குமாறு அன்னா ஹஸாரேவுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. ஹஸாரே தவிர மகாராஷ்டிர அரசு மற்றும் சிபிஐக்கும் விளக்கம் அளிக்கக் கோரி உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞர் என்.எல்.சர்மா என்பவர் பொது நலன் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.அதில், 1995ம் ஆண்டு முதல் 2003ம் ஆண்டு வரை அன்னாவின் அறக்கட்டளை கணக்கு வழக்குகளை முறையாக பராமரித்து வரவில்லை.

மேலும் மத்திய அரசும், மாநில அரசும் கொடுத்த நிதி குறித்த கணக்கு வழக்கும் முறையாக இல்லை. எனவே இதுகுறித்து விரிவான விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று சர்மா கோரியிருந்தார். ஏற்கனவே இந்த நிதி முறைகேடு தொடர்பாக பி.எஸ்.சாவந்த் கமிஷன் விசாரணை நடத்தியுள்ளது என்பது நினைவிருக்கலாம். அறக்கட்டளை பணத்தை எடுத்து அன்னாவின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டதாகவும்,இதுவும் ஒரு வகையில் முறைகேடே என்று சாவந்த் கமிஷன் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம்

வரலாற்றில் எல்லாருக்கும் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதை உலகத்தைப் படிக்க வைப்பது நமது கையில்தான் உள்ளது.



அவரது 80வது பிறந்தநாளை முன்னிட்டு, கோவையில் "பசுமபுலரி" அமைப்பின் சார்பில் நடந்த, "பாதையெங்கும் பசுமை" நிகழ்ச்சியில், பல ஆயிரம் மாணவ, மாணவியர் மத்தியில் அவர் பேசியதாவது:உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பறக்க வேண்டுமென்ற உணர்வு இருக்க வேண்டும். வாழ்வில் பெரிய லட்சியத்தை அடைய அது வழிவகுக்கும். நீ யாராக இருந்தாலும், எந்த கிராமத்தில் இருந்தாலும், உன்னால் வெற்றியடைய முடியும். நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும், உழைப்பால் அதை ஒரு நாள் அடைய முடியும்.எண்ணங்கள் பெரிதாக இருந்தால், செயல்கள் பெரிதாக இருக்கும். செயல்கள் பெரிதாக இருந்தால், வாழ்க்கை உயர்வாகும் என்பதை வள்ளுவர் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி விட்டார். உங்கள் உள்ளத்தில் லட்சிய ஒளி பிரகாசிக்கட்டும். லட்சியத்தை அடைய அறிவாற்றலைப் பெருக்க வேண்டும். அதை அடைய உழைப்பு முக்கியம்.

உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அத்துடன் விடாமுயற்சி இருந்தால், வெற்றி உங்களை வந்து சேரும். வரலாற்றின் பக்கங்களில் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதை உலகம் படிக்க வைப்பது, நமது கையில்தான் உள்ளது. எந்த மாயவலையிலும் விழமாட்டேன் என்ற உறுதி இருந்தால், வரலாற்றுப் பக்கத்தில் நீங்களும் இடம் பிடிப்பீர்கள்.வாழ்வில் வெல்ல 5 விஷயங்கள் அவசியம். முதலில் லட்சியம் வேண்டும். அதை அடையக் கூடிய அறிவைத் தேடிப்பெற வேண்டும். அதற்கு கடும் உழைப்பு வேண்டும். பிரச்னைகளைக் கண்டு பயப்படக் கூடாது. பிரச்னைகளைத் தோல்வியடையச் செய்து, வெற்றியடைய வேண்டும். விடாமுயற்சி வேண்டும் எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல ஒழுக்கம் வேண்டும்.குடும்பத்துக்கும், நாட்டுக்கும், உலகிற்கும் நல்லதொரு அங்கமாக இருப்பேன் என்ற உறுதி உங்களுக்கு இருக்க வேண்டும். நீங்கள் அனைவரும் சமூகத்தில் பொறுப்புள்ள மனிதர்களாக மாற வேண்டும் நான் அடுத்த முறை வரும்போது, கோவையில் நிறைய மரங்களையும், ஊருணிகளையும் பார்க்க வேண்டும் அதுதான் எனது விருப்பம்.இவ்வாறு, அப்துல் கலாம் பேசினார்.

மாணவ, மாணவியரிடம் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்த கலாம், இடையிடையே பல கேள்விகளைக் கேட்டு, "உங்களில் யார் டாக்டராக, இன்ஜினியராக, சயின்டிஸ்ட் ஆக விருப்பம்?" என்று தனித்தனியாக கேள்வி கேட்டார். இறுதியாக, "உங்களில் யாருக்கு அரசியல்வாதி ஆக ஆசை?" என்று அவர் கேட்டபோது, ஒரே ஒரு சிறுவன் மட்டும் கை தூக்கினான்.அந்த சிறுவனிடம் "மைக்"கைக் கொடுக்கச் சொல்லி, "நீ அரசியல்வாதியானால் ஊருக்கு என்ன செய்வாய் என்று சொல்,"" என்றார் கலாம். அதற்கு அந்தச் சிறுவன், "மக்களுக்கு நல்லது செய்வேன்" என்றான். அதற்கு, ""என்ன செய்வேன்னு சொல்லாமல், அரசியல் தலைவர் மாதிரியே பேசுறியே,"" என்று அப்துல் கலாம் கூற, அங்கிருந்த அனைவரும் சிரித்தனர்.

## வட இந்தியாவில் மூளைக் காய்ச்சலுக்கு 400 பேர் பலி

மூளைக் காய்ச்சலினால் ஏராளமான சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

வைரல் என்சி'.பாலிட்டிஸ் எனப்படும் ஒருவகை மூளைக் காய்ச்சல் நோய் பரவியதால், வட இந்தியாவில் பெரும்பாலும் சிறார்கள் அடங்கலாக 400 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மூளை வீக்கமடையும் இந்த வகைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 2400 பேர் உத்தரப் பிரதேசத்தில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆரம்ப காலத்தில் இந்த நோய் கொசு மூலம் பரவியதாகக் கருதப்பட்டாலும், தற்போது மாசடைந்த நீரினாலேயே இது அதிகம் பரவியுள்ளதாகக் கூறப்படுகிறது. உயிரிழந்த 420 பேரில் 335 பேர் சிறார்களாவர்.

## அச்சத்தை களைந்த பின்பே அணு உலை- முதல்வர்

கூடங்குளம் பகுதி மக்களின் சந்தேகங்கள் தீர்க்கப்படும் வரை அங்கே அணுமின் நிலைய கட்டுமானப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பதே தனது அரசின் உறுதியான நிலைப்பாடு என தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

கூடங்குளத்தில் ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு அணு உலைகளின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துவரும் நிலையில், இத்திட்டத்துக்கு எதிரான போராட்டம் செப்டம்பர் மாதம் பெரிதளவில் வெடித்தது.

ஜெயலலிதா பிறகு போராட்டக்குழுவினர் போராட்டத்தினை சில காலம் இடைநிறுத்திவைத்து, தமிழக முதல்வரையும் இந்தியப்பிரதமரையும் சந்தித்தனர். ஆனால் அச்சந்திப்புக்களுக்குப் பிறகும் அணு மின்நிலையம் மாநில வளர்ச்சிக்கு அவசியம் என்ற ரீதியில் பிரதமன் மன்மோகன் சிங் கருத்து தெரிவிக்க, போராட்டம் கூடங்குளத்தில் தீவிரமடைந்திருக்கிறது.

இந்நிலையில் இது குறித்து செவ்வாய்கிழமையன்று பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதியுள்ள கடிதமொன்றில், முதல்வர் ஜெயலலிதா கூடங்குளம் மக்களின் அச்சங்களைத் தவிர்ப்பதற்கு மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும், மாநில அரசின் மீது வீண் பழி சுமத்துவதை கைவிட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

## நெருப்போடு விளையாடுகிறது இந்தியா சீன பத்திரிகைகள் எச்சரிக்கை



தென் சீனக் கடலில், எண்ணெய் துரப்பண பணிக்காக, வியட்நாமுடன் இந்தியா மேற்கொண்டுள்ள ஒப்பந்தம், நெருப்போடு விளையாடுவதற்குச் சமம். இந்தப் பணியில் இருந்து உடனடியாக இந்தியா பின்வாங்க வேண்டும் என, சீன பத்திரிகைகள் மிரட்டியுள்ளன.வியட்நாம் அதிபர் ட்ருவாங் டன் சங் கடந்த வாரம் இந்தியா வந்தார். அப்போது, அரசின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கார்ப்பரேஷனுக்கும், வியட்நாமின் பெட்ரோ வியட்நாம் நிறுவனத்துக்கும் இடையில், எண்ணெய் துரப்பண பணி தொடர்பாக ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.இந்த ஒப்பந்தங்களின்படி, வியட்நாமின் தென் கடற்பகுதியில் உள்ள நாம் கோன் சன் என்ற எண்ணெய் வளப் பகுதியில், எண்ணெய் துரப்பணி மேற்கொள்ளப்படும்.தென் சீன கடலில் எண்ணெய் வளம் அதிகமாக இருப்பதால், அதற்கு சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், புருனே மற்றும் தைவான் நாடுகள் உரிமை கோரி வருகின்றன. இவற்றில், சீனா தென் சீனக் கடல் முழுமையும் தனக்குரியது என வாதாடி வருகிறது.இந்நிலையில், இந்தியா - வியட்நாம் ஒப்பந்தம் குறித்து நேற்று, க்ளோபல் டைம்ஸ் மற்றும் சீனா டெய்லி ஆகிய சீன பத்திரிகைகள் இந்தியாவுக்குக் கடும் மிரட்டல் விடுத்துள்ளன.

இதுகுறித்து அவற்றில் கூறியிருப்பதாவது:

சீனா- வியட்நாம் இடையே, கடந்த 11ம் தேதி கடல்சார் பிரச்னைகள் தொடர்பாக ஒப்பந்தம் கையெழுத்தானது. மறுநாள், வியட்நாம் இந்தியாவுடன் எண்ணெய் துரப்பண ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. இது வியட்நாமின் இரட்டை வேடத்தை வெளிப்படுத்தியுள்ளது.வியட்நாமோடு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், வியட்நாம் பிராந்தியத்தில் தனது அரசியல் செல்வாக்கையும் அதிகரிக்க இந்தியா கருதுகிறது.இந்த ஒப்பந்தத்தின் பின்னணியில் அரசியல் உள்நோக்கம் உள்ளது. இது நெருப்போடு விளையாடுவதற்குச் சமம். இதற்கு சீனா சம்மதிக்கக் கூடாது. இன்று சீனா சும்மா இருந்தால், நாளை பல நாடுகள் தென் சீன கடலுக்குள் நுழையும். தென் சீன கடலில் நுழைந்து மீன்பிடிப்பதன் மூலம், சீனா உடனான பல பிரச்னைகளில் பேரம் படிய வைக்கலாம் என இந்தியா நினைக்கிறது.வெறும் வாய் வார்த்தைகளால் மட்டும் சீனா மறுப்பு தெரிவிக்காமல், இந்திய, வியட்நாம் பணியைத் தடுக்க என்ன வகையில் எல்லாம் இடையூறு செய்ய முடியுமோ, அந்த வகையில் செய்ய வேண்டும்.இவ்வாறு சீன பத்திரிகைகள் தெரிவித்துள்ளன

## முக்கிய ஆவணங்களை குப்பைத் தொட்டியில் வீசிய இங்கிலாந்து அமைச்சர்

அல்கய்தா தீவிரவாதிகள் மற்றும் உளவு துறை தகவல்கள் அடங்கிய ரகசிய ஆவணங்களை இங்கிலாந்து அமைச்சர் குப்பை தொட்டியில் வீசியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்து பிரதமர் டேவிட் கேமரூன் கேபினட்டில் அமைச்சராக இருப்பவர் ஆலிவர் லெட்வின் (55). கேமரூனுக்கு வலது கரமாக இருப்பவர். பிரதமர் அலுவலகத்தில் நடக்கும் முக்கிய கூட்டம், ரகசிய ஆலோசனை கூட்டம் எதுவாக இருந்தாலும் ஆலிவர் கண்டிப்பாக இருப்பார். பாகிஸ்தானுடன் அல்கய்தா தீவிரவாதிகளின் தொடர்பு, இங்கிலாந்து உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான முக்கிய ஆலோசனை கூட்டங்கள் பிரதமர் தலைமையில் கடந்த ஆண்டு பலமுறை நடந்துள்ளன. அவற்றில் ஆலிவரும் கலந்துகொண்டார். கூட்டம் முடிந்த பிறகு ஆவணங்களோடு புறப்படும் இவர், லண்டன் செயின்ட் ஜேம்ஸ் பூங்கா அருகே உள்ள குப்பைத் தொட்டியில் ஆவணங்களை வீசியது கண்காணிப்பு கேமராவில் பதிவானது.

2010-ம் ஆண்டு ஜூலை 27-ம் தேதி முதல் கடந்த 30-ம் தேதி வரையில், 5 முறை இவ்வாறு ரகசிய ஆவணங்களை அவர் இந்த குப்பை தொட்டியில் வீசி சென்றது அம்பலமானது. நூற்றுக்கணக்கான ரகசிய ஆவணங்கள் குப்பையில் வீசப்பட்டிருப்பதால் உள்நாட்டு பாதுகாப்பு கேள்விக் குறியாக உள்ளது என்று மீடியாக்கள் பக்கம் பக்கமாக செய்தி வெளியிட்டு வருகின்றன. இது பிரதமர் கேமரூனுக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.







கடந்த 18 அன்று நடந்த Crawley அம்மன் கோயில் ஸ்ரீ கிருஷ்ண மகாகும்பாபிசேகம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.



## கவர்ச்சி அதிரடி தி டர்ட்டி பிக்சர்ஸ்



கதிகலங்க வைக்கும் கவர்ச்சியுடன் தயாராகும் படம் தி டர்ட்டி பிக்சர்ஸ் (இந்தி) , வித்யாபாலன் சில்க் ஸ்மிதாவாக நடிப்பதும் அனைவரும் அறிந்ததே , இப்போதே கவர்ச்சியாக இவர் தோன்றும் படங்கள் மற்றும் முன்னோட்டம் என்பன வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது எதிர்வரும் டிசம்பர் இரண்டாம் திகதி சில்க்கின் பிறந்தநாள் அன்று திரைக்கு வரப்போகும் இந்த படத்திற்காக கடுமையாக உழைத்ததில் உடல் நலக்குறைவு ஏற்பட்டு வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார் வித்யா தி டர்ட்டி பிக்சர்ஸ் சூட்டிங் ஹைதராபாத்தில் தொடர்ந்து நடந்து வந்தது. அப்போது வித்யாபாலனுக்கு திடீரென காய்ச்சல் ஏற்பட்டது. இருந்தும் காய்ச்சலை பொருட்படுத்தாது தொடர்ந்து சூட்டிங்கில் நடித்து வந்தார். இந்நிலையில் அவரது உடல்நிலை ரொம்பவே சோர்ந்து போக, கடந்த வெள்ளிக்கிழமை மும்பையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு வித்யாவை சோதித்த மருத்துவர்கள், ரத்தத்தில் ஹீமோகுளாபினின் அளவு குறைந்து இருப்பதை கண்டறிந்தனர். இதனையடுத்து தொடர்ந்து 3நாட்கள் மருத்துவமனையிலேயே தங்கி சிகிச்சை பெற்றார் வித்யாபாலன். பின்னர் உடல்நிலை சீராகி வீடு திரும்பியிருக்கும் வித்யாவை, சிறிதுகாலம் ஓய்வு எடுக்க சொல்லி மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.






## தீபாவளி ரேசில் ரா ஒன் - ஏழாம் அறிவு கடுமையான போட்டி

ரா ஒன்னில் ரஜினி நடித்ததும் நடித்தார் தமிழர்களிடமும் ரா ஒன் பரபரப்பு கடுமையாக தொற்றியுள்ளது, இதில் இன்னுமொரு பாதிக்கப்பட்ட தரப்பும் உள்ளது அது தமிழ் திரையுலகம்தான் , ஏற்கனவே வேலாயுதம் , ஏழாம் அறிவு படங்களின் வருகையினால் தனுஷ் , சிம்பு , ஆகியவர்களின் படங்கள் தீபாவளிக்கு வெளியிடப்படாது என அறிவிக்கப்பட்டது இந்நிலையில் ரா ஒன் படத்தில் ரஜினியின் அதிரடி பிரவேசம் காரணமாக தமிழகத்தின் நல்ல திரையரங்குகள் அனைத்தும் ரா ஒன்னை வாங்கவே ஆர்வமாக உள்ளதாக தெரிகிறது எனவே விஜயின் வேலாயுதத்திற்கு நல்ல திரையரங்கள் கிடைக்குமா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் விஜய் தரப்பு லண்டனில் வசிக்கிறது. சா∴ப்ட்வேர் என்ஜினியரான ஷாருக், கம்ப்யூட்டரில் புதுப்புது பொம்மைகளையும், கம்ப்யூட்டர் கேம்ஸ்களையும் உருவாக்கிடும் வல்லூனர். தன் குழந்தைக்காக ஹீரோவைக்காட்டிலும் அதிக சக்தியுடைய வில்லனாக ரா-1 மனித பொம்மையை வடிவமைக்கிறார். அது சா∴ப்ட்வேர் கம்ப்யூட்டர்களை எல்லாம் தாண்டி எந்திர மனிதனாக வெளிவந்து உலகை அழிக்க முயல்கிறது. அதன் கொட்டத்தை அடக்க ஜி-1 எனும் சூப்பர் பவர் ஹீரோ அவதாரம் எடுக்கும் ஷாருக், அதை எவ்வாறு அடக்கி ஒடுக்குகிறார் என்பதுதான் ரா-1 படத்தின் மொத்த கதையும். இதில் ரா-1 கேரக்டரில் ராவணனாகவும், ஜி-1 கேரக்டரில் ராமனாகவும் ஷாருக் சித்தரித்திருப்பது



கொஞ்சம் பதட்டம் அடைந்தாலும் ஏழாம் அறிவு குழுவினர் மட்டும் எதற்கும் தயாராக தைரியமாய் களமிறங்குகின்றனர் காரணம் அவர்களின் கதையமைப்பும் மிரட்டும் தொழினுட்பமும்தான்

அதிலும் ரா ஒன் முன்னோட்டத்தை விட ஏழாம் அறிவு முன்னோட்டம் பக்காவாக அமைக்கப்பட்டுள்ளது ரா ஒன் கதை தொடர்பாக இப்போது இணையங்கள் சில ஊகிக்கப்பட்ட கதைகளை வெளியிட ஆரம்பித்துள்ளன கதைப்படி, ஹீரோ ஷாருக், கரீனா கபூர் ஜோடி கூடுதல் ஹைலைட்! படத்தில் தன் குழந்தைகளைக்காட்டிலும் அதிக பயந்த சுபாவம் உடைய ஷாருக், சூப்பர் ஹீரோ ஆவதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஏழாம் அறிவு கதை கொஞ்சமும் ஊகிக்கமுடியாதுள்ளது இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட போதி தர்மன் என்ற தமிழ் துறவியை மையப்படுத்திய கதை என்பதை தவிர இதுவரை வேறெந்த தகவலும் இல்லை .

## சினிமாவிற்கு குட் பாய் சொல்லும் ஜெனிலியா



திருமணம் அழைப்பதனால் சினிமாவுக்கு வணக்கம் சொல்லி விடைபெறுகிறார் ஹரிணி என முன்பு அழைக்கப்பட்ட ஜெனிலியா ஜெனிலியாவுக்கும் இந்தி நடிகரும் மத்திய அமைச்சர் மகனுமான ரிதேஷ் தேஷ்முக்கிற்கும் சில தினங்களுக்கு முன் நிச்சயதார்த்தம் நடந்தது.திருமணத்துக்குப் பிறகு நடிப்பதில்லை என ஜெனிலியா முடிவு செய்துள்ளார். தமிழில் விஜயுடன் இவர் நடித்து வெளியாகவிருக்கும் வேலாயுதம்தான் இவரின் கடைசிப்படம் என அறியமுடிகிறது

இந்தப் படம் தீபாவளிக்கு வெளியாகிறது. ஆனால் அவரை இன்னும் ஒரு படத்தில் நடிக்குமாறு இயக்குநர் சிம்புதேவன் கேட்டுக் கொண்டுள்ளார். அது தனுஷ் நடிக்கும் மாரீசன் ஆகும்.ஆனால் இன்னும் தன்முடிவை ஜெனிலியா சொல்லவில்லையாம்.

இந்தியில் கைவசம் உள்ள 3 படங்களையும் முடித்துவிடலாம் என திட்டமிட்டுள்ளார்.
வரும் பிப்ரவரியில் திருமணம் செய்யத் திட்டமிட்டுள்ளார்களாம் ஜெனிலியா

# சதுரங்கம் திரை விமர்சனம்



ஒரு நல்ல உயிரோட்டமான கதை நேரத்திற்கு வெளிவராததால் அநியாயம் ஆகிவிட்டது ...சதுரங்கம் கரு பழனியப்பன் இயக்கத்தில் ஸ்ரீகாந்த சோனியா அகர்வால் நடித்து 2004 ஆம் ஆண்டே வேண்டியது பல காரணங்களினால் அப்போது வெளிவராமல் ஏழு வருடம் கழித்து வெளிவந்திருக்கிறது ஆனாலும் ரசிக்க வைத்திருக்கிறது

ஒரு நிருபரின் வாழ்க்கையில் நடக்கும் சதுரங்க ஆட்டம்தான் கதை.
திசைகள் பத்திரிகையில் நிருபராக பணியாற்றுகிறார் ஸ்ரீகாந்த். அவர் எழுதும் கட்டுரைகளுக்கு வாசகர்கள் மத்தியில் பாராட்டும், அதிகாரிகள் மத்தியில் சலசலப்பும் ஏற்படுகிறது. அவரால் பாதிக்கப்படும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் ஸ்ரீகாந்தை எச்சரிக்கின்றனர். என்றாலும் நெஞ்சை நிமிர்த்தி எதற்கும் பயப்படாமல் தில்லாக நிற்கிறார் ஸ்ரீகாந்த். இந்த நிலையில் அவரது காதலியான சோனியா அகர்வால் அவர் கண்ணெதிரே ஒரு கும்பலால் கடத்தப்படுகிறார். யார் கடத்தினார்கள் என்பது சஸ்பென்சாக இருக்கிறது. பொலிசில் புகார் செய்தும் அலட்சியம் செய்கிறார்கள். இதனால் பல எதிரிகள் இருப்பதால் காதலியை கடத்தியவர் யார் என்று தெரியாமல் தேடிக்கொண்டிருக்கிறார் ஸ்ரீகாந்த். அவர் காதலியை கண்டு பிடித்தாரா? கடத்தியது யார்? என்பது போன்ற கேள்விகளுக்கு க்ளைமாக்ஸ் பதில் சொல்கிறது

நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு லேசான புன்முறுவலோடு எதிராளியின் எச்சரிக்கையை அலட்சியம் செய்யும் ஸ்ரீகாந்த், அதே அலட்சியத்தை இறுதிவரை காட்ட முடியாதளவுக்கு யதார்த்த வலையில் சிக்கிக் கொள்வதை ஊசி செருகியதை போல உணர வைக்கிறார் டைரக்டர். தனக்கு கொடுக்கப்பட்ட கேரக்டரை இவ்வளவு அழகாக வெளிப்படுத்துவார் ஸ்ரீகாந்த் என்று யாருமே யூகித்திருக்கவும் போவதில்லை. இவருக்கும் சோனியாவுக்குமான காதல் அழகான பூங்கொத்து. கரு.பழனியப்பனின் கதாநாயகிகள் வெறும் மரம் சுற்றிகள் அல்ல என்பதை சோனியாவும் நிரூபிக்கிறார். பேங்குக்கு பேனா இல்லாமல் வரும் ஸ்ரீகாந்திடம் நான் பேனா கொடுக்க மாட்டேன் என்று முகத்திற்கு நேரே கோபம் காட்டுவதும், அதற்காக அவர் தரும் விளக்கமும் ஆஹா. பீச்சில் வெகு நேர காத்திருப்புக்கு பின் எப்பவும் நான்தான் உனக்காக காத்திருக்கேன் என்று துவங்கி அவர் பேசும் அந்த டயலாக் மனசை பிசைகிறது. பின்னணி குரல் கொடுத்தவருக்கும் சேர்த்தே ஒரு பாராட்டு பத்திரம் தரலாம்.

ஒரு பக்கம் காதல், இன்னொரு பக்கம் அரசியல், அரசு அதிகாரிகளுடன் மோதல் என்று முதல் பாதி விறுவிறுப்பாக செல்கிறது. சோனியாவை கடத்தி வைத்திருக்கும் ஜெயில் அதிகாரி, ஸ்ரீகாந்தை அங்குமிங்கும் அலைய விடும் காட்சிகள் முதலில் சீரியசாக இருந்தாலும் பின்னர் எதிர்பார்த்த திரில் இல்லை. வழக்கமான திரைக்கதையாக செல்கிறது. சரண்யா பொன்வண்ணன், இளவரசு, மனோபாலா, பத்திரிகை ஆசிரியராக வரும் மணிவண்ணன் என அவரவர் தங்களின் பாத்திரம் உணர்ந்து நடித்திருக்கிறார்கள். பத்திரிகை சார்ந்த கதையை கே.வி.ஆனந்த் கோ படம் மூலம் கொடுத்து வெற்றி பெற்று விட்டார்.

இந்த சதுரங்கம் 2004-ல் எடுத்த படம். அப்போதே இது வெளி வந்திருந்தால் சினிமா ரசிகர்களுக்கு புதுமையானதாக இருந்திருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. கரு.பழனியப்பன் பத்திரிகையாளராக • இருந்தவர் என்பதால் ஸ்ரீகாந்தை அச்சு அசலாய் பத்திரிகையாளராக மாற்றியிருக்கிறார். மந்திரியாக வரும் மகாதேவன், ஸ்ரீகாந்தைப் பார்த்து எங்கள மாதிரி தப்பானவங்க ஜெயிப்போம்னு நம்புறோம்.

உங்களை மாதிரியான நல்லவங்க தோத்துடுவோம்னு நம்புறீங்க. முதல்ல ஜெயிப்போம்னு நம்புங்க.. என்று பேசுகையில் பத்திரிகையாளர்களை உயர்த்தி வைக்கிறார். வித்யாசாகரின் இசையில் மகாகவி பாரதியாரின் ஆடுவோமே... பாடல் மனதில் நிறைகிறது. விழியும் விழியும்... பாடல் இனிமை. என்ன தந்திடுவேன்... நான் என்னை தந்திடுவேன் பாடல் தைய தா தைய தா... தைய தைய தா... பாடலை நினைவு படுத்தினாலும், காதுக்கு இதமாய்த்தான் இருக்கிறது. வித்யாசாகரின் பின்னணி இசை தேவையான இடத்தில் ஒலித்து நமக்கு திருப்தியை தருகிறது.

திவாகரின் ஒளிப்பதிவு படத்திற்கு பக்கபலமாய் நிற்கு, அதற்கு உறுதுணையாய் இருக்கிறது சுரேஷ் அர்ஸ்ஸின் படத்தொகுப்பு. ராஜீவனின் கலை வண்ணத்தில் உருவான பத்திரிகை அலுவலகம் கலக்கல்.

கதையை புதுமையான பாதையை நோக்கி கொண்டு செல்கிறார் இயக்குநர் கரு.பழனியப்பன் என்று பார்த்தால் க்ளைமாக்சில் வழக்கமான முடிவை சொல்லி ஏமாற்றமே தந்திருக்கிறார். 2004-ல் எடுக்கப்பட்ட இந்த படத்தில் ஏகப்பட்ட திருப்பங்கள் இருக்கின்றன என்றாலும் இந்த காலகட்டத்தில் நிறைய படங்களில் அவைகள் எல்லாம் வந்து விட்டதால் எதுவும் புதிதாய் தோன்றவில்லே. ஆனால் படம் ரசிக்கும் வகையில் உள்ளது.




## ஓ வானமே!

இல்லாத உன்னை
இருப்பதாய் காட்டும்
பொல்லாத பொருளே

பூமி வீட்டின் ஓட்டைக்கூரையே
சூரியப்பூப்பூத்த சொர்க்க வெளியே
பால்நிலவின்படுக்கை விரிப்பே

வானவில்லாள் வந்து,
நீளம் பாய்ந்த நிலமேவானமே!
வளி வழியும் கடலே முகிலுடுத்த உடலே
உடையை களைந்துமழையை ஊற்றும் மார்பே

பனிப்பூச்சிகள் முளைத்து
பறக்கும் மாயப்புல் வெளியே
மின்னல் மனிதர்கள் வந்துமீன் விற்கும் சந்தையே

விண்ணே!
வெளிச்சத்தை பிரசவிக்கும் பெண்ணேகோள்
குஞ்சுகளின்பெருங்கூடே

விண்வெளியின் உயரமே
விஞ்ஞானியின் பேராசையே
மர்மங்கள் நிரம்பிய மனிதர் அறியா வெற்றிடமே
ஒப்பில்லா உன்னிடம் ஒரேயொரு கேள்வி
எங்கும் தேடினேன் காணவில்லை இறைவனின் இருப்பிடம்
நீதானா?
இல்லாத ஒன்றைஇருப்பதாய் காட்டும்
பொல்லாத வானமே!

-காரையம்சன்-

1

# இலங்கைத் தமிழ்ழ அரச ஊழியர்கள், தொழிலாளர்களின் அவலங்களும், அனர்த்தங்களும்

(.ஐ.தி.சம்பந்தன்)



இலங்கையின் பொருளாதார வளர்ச்சியிலும் அரச நிருவாகத்துறையின் உயர்விலும் தமிழ் அரச ஊழியர்களதும் தமிழ்த் தொழிலாளர்களதும் பங்களிப்பு திடகாத்திரமாக இருந்தது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் அரசாங்க நிர்வாக சேவை என்றாலும், தோட்டத்துறை பொருளாதார வளர்ச்சி என்றாலும், தமிழ்த்தொழிலாளர்களின் கடும் உழைப்பாலும், திறமையாலும், அற்பணிப்பாலும் ஏற்றமடைந்ததை எவரும் மறுக்க முடியாது.

இவ்வாறு இலங்கை நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைத்து வந்த தமிழ் அரசு ஊழியர்கள், தமிழ்த்தொழிலாளர்கள் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பாரிய பாதிப்பையும் அவலங்களையும் தழுவிக்கொண்டனர். அவர்கள் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக அனுபவித்துவரும் அவலங்களையும், அனர்த்தங்களையும் எடுத்துக் கூறுவது இன்றைய காலத்தின் தேவையாகும். அவர்களது திறமையும் அறிவும், கடும் உழைப்பும், கடமை உணர்வும், விசுவாசமும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பெரிதும் மதிக்கப்பட்டன.

தமிழ்த் தொழிலாளர்களின் விடுதலைக்குத் தமிழ்த்தாயகம் அமைய வேண்டியது அவசியம் என்பதைச் சர்வதேச சமூகத்திற்கும், சர்வதேச தொழிற்சங்க அமைப்புகளுக்கும் எடுத்துக் கூற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக சிங்கள அரசு மேற்கொண்ட இனஒதுக்கல் நடவடிக்கைகளினால் தமிழ் அரசு ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட அவலங்களையும், அவல நிலைமைகளையும் காலத்திற்குக் காலம் தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் கூறிவந்துள்ளன.

பத்து இலட்சம் மலையகத் தமிழ் தொழிலாளர்களின் உரிமைக்காக மலையகத் தொழிற்சங்கங்களும் குறிப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சும், தமிழ் அரச ஊழியர்கள், தொடர்பாக மொழிவழித் தொழிற்சங்கங்களும் நீண்ட காலமாகப் போராடி வந்தன.

திரு. பாலத்தம்பு அவர்களின் தலைமையிலான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சிங்களத் தொழிலாளர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு இயங்கி வரும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை 1982ல் அங்கீகரித்தது.

இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட தமிழ்த்தொழிலாளர்களுக்கு குரல் கொடுத்தது. தமிழ் ஊழியர்கள் இனரீதியாக பாதிக்கப்படும் போது அவற்றைச் சந்திக்குக் கொண்டு வந்த பெருமை அச்சங்கத்திற்கு உண்டு.

தமிழ் ஊழியர்கள் தமிழர்கள் என்பதால் பல்வேறு இன ஒதுக்கல் கொள்கைகளுக்கும் ஆட்பட்டு இன்னல்களையும் அவலங்களையும் அனுபவித்து வருகின்றனர். இந்நாட்டில் தேசிய பொருளாதாரத்தின் மையமாக விளங்குவது மலையகப்பிரதேச தேயிலை, இரப்பர், தென்னைப்பயிர் செய்கையாகும்.

வெறும் காடாகவும், மலையகப்பிரதேசமாகவும் இருந்த மண்ணை வளமுள்ளதாக்கிப் பொன் கொழிக்கும் பூமியாக்கிய பெருமை மலையகத்தில் வாழும் தமிழ்த்தொழிலாளர்களைச் சார்ந்ததாகும்.

ஆங்கிலேயர் இலங்கையை 150 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்தனர். அவர்களது ஆட்சிக்காலத்தில் தமிழகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழ்த்தொழிலாளர்களே இன்று மலையகத்தில் வாழும் மக்கள். குறைந்த சம்பளத்தில் கூடிய வேலை வாங்கி மலையகப்பிரதேசத்தைப் பசும் பூமியாக்கியவர்கள்.

தொடரும் ..........








# வாழ்வாங்கு வாழவும் வணங்கி வழிபட்டு வையமெல்லாம் புகழ் பெறவும் மணக்குள விநாயகர் ஆலயம் புதுச்சேரி



விருப்பத்துடன் விரும்பி வணங்கினால் எண்ணமெல்லாம் ஆனந்தம் தரும் விநாயகனின் பெருமை சொல்லும் இன்னுமொரு ஆலயம் மணக்குள விநாயகர் ஆலயம் புதுச்சேரி (பாண்டிச்சேரி) ஐநூறு வருடங்களுக்கு முற்பட்ட தல வரலாற்றை கொண்ட இவ்வாலயம் கோபுரம் முழுக்க முழுக்க தங்கத்தினால் வேயப்பட்ட இந்தியாவின் ஒரே ஒரு விநாயகர் ஆலயம் என்பது பெருமை.

பிரெஞ்சுக்காரர்கள் ஆட்சிகாலத்தில் கி.பி.1688ல் பிரெஞ்சுகாரர்கள் தங்களுக்காக கோட்டை ஒன்று கட்டினர். இக்கோட்டைக்கு பின்புறம் அமைந்திருந்த கோயிலே மணக்குள விநாயகர் திருக்கோயில். இத்திருத்தலத்தின் மேலண்டைப்பகுதியில் ஒரு குளம் இருந்ததாகவும் அது கடற்கரைக்கு அருகில் இருந்ததால் அவ்விடத்தில் மணல் அதிகமாக வந்ததாகவும் ஆகவே அக்குளத்திற்கு மணற்குளம் என்று பெயர் வந்ததாகவும் உறுதியாகச் சான்றுகளுடன் கூறுவர். புதுச்சேரியைப் பற்றி அறியக் கிடக்கின்ற பல தரப்பட்ட வரலாற்றுச் செய்திகள் இந்த உண்மையை வலியுறுத்துகின்றன. இந்த மணற்குளத்தின் கீழ்க்கரையில் தான் விநாயகர் ஆலயம் எழுப்பப் பட்டிருக்கின்றது. இதன் காரணமாக இந்த ஆலயத்திற்கு மணற்குள விநாயகர் ஆலயம் என்ற பெயர் பிரபலமாயிற்று.

உற்சவர் வில்புருவமும் மூன்று பதமாகவும் நிற்கிறார். விநாயகருக்கு இத்தலத்தில் மட்டும்தான் திருக்கல்யாணம் நடக்கிறது. இங்கு சித்தி புத்தி அம்மைகள் மனைவியாக உள்ளனர். சிவதலங்களில் இருக்கும் நடராஜரைப் போல் நர்த்தன விநாயகர் இங்கு இருக்கிறார். விநாயகர் தலங்களில் பள்ளியறை இருப்பது இங்கு மட்டுமே தொல்லைக் காசு சித்தர் இந்த மணக்குளத்து விநாயகரை வணங்கியுள்ளார். பாரதி, அரவிந்தர் அன்னை ஆகியோர் இத்தலத்தின் தீவிர பக்தர்களாக இருந்துள்ளனர். இங்கு தினந்தோறும் அன்னதானம் நடைபெறுகிறது. மூன்று வேளையும் பிரசாதம் செய்து பக்தர்களுக்கு தருகிறார்கள்.

விநாயகர் தலங்களில் வேறு எங்குமே இல்லாத சிறப்பாக பள்ளியறை இங்கு உள்ளது. இங்கு பள்ளியறையில் விநாயகரோடு உடன் இருப்பது அவரது தாயார் சக்தி தேவியார் ஆவார். தினமும் நைவேத்தியம் முடிந்தவுடன் விநாயகர் பள்ளியறைக்கு செல்வார். இதன் அடையாளமாக பாதம் மட்டுமே இருக்கும் உற்சவ விக்ரகம் கொண்டு செல்லப்படுகிறது. கிணற்றின்மீதுதான் மூலவர் : தற்போது மூலவரான மணக்குளத்து விநாயகர் இருக்கும் பீடம் இருப்பதே நீர் நிலை அமைந்துள்ள ஒரு கிணறு அல்லது குளத்தின் மீதுதான் என்பது இத்தலத்தை நன்கு அறிந்த பலருக்கும் தெரியாத செய்தி. பீடத்தின் இடப்பக்கம் மூலவருக்கு மிக அருகில் அரை அடி விட்டத்தில் ஒரு ஆழமான குழி செல்லுகிறது. அதில் தீர்த்தம் உள்ளது. இதன் ஆழம் கண்டுபிடிக்க முடியவில்லை. சென்றுகொண்டே இருக்கிறது. இதில் வற்றாத நீர் எப்போது உள்ளது. இது முன்காலத்தில் இருந்த குளமாவும் இருக்க வாய்ப்பிருக்கிறது என்று கூறுகிறார்கள்

நேர்த்திக்கடன் செலுத்தும் பக்தர்கள் உண்டியல் காணிக்கை, வெளிநாட்டு பக்தர்களின் உபயம் ஆகியவற்றால் கோயில் மிகுந்த சிறப்புடன் திகழ்கிறது. அமரிக்கர்கள் வைரத்தாலேயே கவசம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பது அதற்கு உதாரணம். இத்தலத்தில் முக்கியமாக பக்தர்கள் தங்கள் நேர்த்திகடனாக சித்தி புத்தி விநாயகருக்கு கல்யாண உற்சவம் நடத்தி வைக்கிறார்கள் வெள்ளித்தேர் இழுத்தும் நேர்த்திகடன் செலுத்துகிறார்கள். தவிர கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானமும் செய்கிறார்கள். விநாயகர் சதுர்த்தி - இத்தலத்தில் மிகவும் விமரிசையாக கொண்டாடப்படும். அது தவிர ஜனவரி முதல் தேதி அன்றுதான் இத்தலத்தின் பிரமாண்டமானஅளவில் பக்தர்கள் கூடுவர்கள். பிரம்மோற்ஸவம் - ஆவணி - 25 நாட்கள்திருவிழா பவித்திர உற்சவம் - 10 நாட்கள்திருவிழா இது தவிர மாதந்தோறும் சங்கடஹர சதுர்த்தி தினத்தின் போது மூலவருக்கு அபிஷேக ஆராதனைகள் மிக விமரிசையாக நடக்கும். அப்போது ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கலந்து கொள்வர் எல்லா விதமான பிரார்த்தனைகளும் இங்கு நிறைவேறுகின்றன. கல்யாணவரம், குழந்தை வரம் உள்ளிட்ட எந்த காரியமானாலும் இவரை வணங்கினால் நன்மை கிடைக்கிறது. தொழில் தொடங்குவோர், புதுக்கணக்கு எழுதுவோர், கல்யாண பத்திரிக்கை வைத்து வழிபட விரும்புவோர், புது வாகனங்கள் வாங்குவோர் இத்தலத்துக்கு பெருமளவில் வருகின்றனர்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம்எதுவெனில் இந்து மதம் என்றில்லாமல் முஸ்லிம், கிறிஸ்த்துவ மதத்தை சார்ந்தவர்களும் வெளிநாட்டினர் பெருமளவில் இங்கு வந்து வழிபடுகிறார்கள். பாண்டிச்சேரியை விட்டு வெளியூர் கிளம்புவர்கள் இத்தலம் வந்து மணக்குள விநாயகரை வணங்கிவிட்டுத்தான் தாங்கள் போக வேண்டிய ஊருக்கு போகிறார்கள் என்பது ஆச்சர்யமான உண்மை. அத்தனை விசேஷம் படைத்தவர் இந்த மணக்குளத்துவிநாயகர். வாழ்வாங்கு வாழவும் வணங்கி வழிபட்டு வையமெல்லாம் புகழ் பெறவும் மனிதர் குளம் வணங்கி வழிபட வேண்டிய தளம் மணக்குள விநாயகர் ஆலயம்


OUR TOUR PLANETS.COM

உங்கள் தென்னிந்திய திருத்தல யாத்திரைக்கு

SELECT HOUSE, 288.HIGH STREET NORTH, EASTHAM, LONDON, E12 6SA.



**முருகன் ஆலயங்கள்**

திருப்பரங்குன்றம்
திருச்செந்தூர்
பழனி
சுவாமிமலை
திருத்தணி
பழமுதிர்ச்சோலை

**விநாயகர் ஆலயங்கள்**

திருச்சி– உச்சிப்பிள்ளையார்
மதுரை– முருக்குருணிப்பிள்ளையார்
பாண்டிச்சேரி–மனக்குள விநாயகர்
காரைக்குடி– கற்பக விநாயகர்

**அம்மன் ஆலயங்கள்**

காஞ்சிபுரம்– காமாட்சியம்மன்
சென்னை– காளிகாம்பாள் அம்மன்
மாங்காடு– காமாட்சி அம்மன்
திருவேற்காடு– கருமாரி அம்மன்
மதுரை– மீனாட்சி அம்மன்

**பஞ்சபூத சிவ ஆலயங்கள்**

ஆந்திரா– ஸ்ரீகாலகஸ்தி – வாயு
சென்னை– ஸ்ரீ ஏகாம்பரேஸ்வர் – பூமி
திருவண்ணாமலை – நெருப்பு
( ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர்)
திருச்சி– ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் – நீர்
சிதம்பரம்– நடராஜர் – அண்டம்

**நவக்கிரக ஆலயங்கள்**

சூரிய நவகிரகஸ்தலம்
சந்திர நவகிரகஸ்தலம்
அங்காரகன் நவகிரகஸ்தலம்
புத நவகிரகஸ்தலம்
குரு நவகிரகஸ்தலம்
சுக்கிர நவகிரகஸ்தலம்
சனி நவகிரகஸ்தலம்
ராகு நவகிரகஸ்தலம்
கேது நவகிரகஸ்தலம்

- வழிகாட்டல். விமானப்பயணம். குளிருட்டப்பட்ட போக்குவரத்து. மூன்று நட்சத்திர மற்றும் அதற்கு மேலதிக ஹோட்டல் தங்குமிட வசதிகள் உள்ளடங்கும்.
- நீங்கள் வருகை தந்த நேரத்திலிருந்து எமது சென்னை அலுவலகம் உங்களது சகல தேவைகளையும் நிறைவேற்றும்.

9061 PROTECTED

TEL:020-8552-2271 | MOB:07425-629-105 | EMAIL:info@ourtourplanets.com

## அலுவலகத்தில் மதியம் சோர்வுஏற்படுவது ஏன்?



அலுவலகத்தில் சிலர் மதியம் ஒரு பத்து பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு கோழி தூக்கம் போட்டால் போதும் பூஸ்ட் குடித்தது போன்று புத்துணர்ச்சியாக விடுவார்கள். இன்னும் சொல்லப்போனால் மதியநேரம் 15 முதல் 30 நிமிடங்கள் வரையிலான இதுபோன்ற தூக்கம் நல்லது இருமடங்கு சுறுசுறுப்புடன் வேலைகளை செய்யமுடியும் என்றுமருத்துவர்கள் கூட அதனை வலியுறுத்துகிறார்கள் எனவே இத்தகையகோழி தூக்கம் போடுபவர்களுக்குபிரச்சனை இல்லை. ஆனால் இன்றைய அவசரயுகவாழ்க்கையில் பலருக்கு அலுவலகத்தில் மதிய உணவு உண்டதுமே தூக்கம் மட்டுமல்ல் ஒட்டு மொத்த உடலே காற்று போனடியூப் கணக்காக புஸ்...ஸென்றுசக்தி இழந்து சோர்வடைந்து போய்விடும். அப்படியே மேஜை மீதே தலைசாய்த்துவிடுவார்கள். இத்தகைய உடல் சோர்வுமற்றும் சக்திகுறைவு மதியநேரம் ஏன் ஏற்படுகிறது என்பது குறித்து நிபுணர்கள் தெரிவிக்கும் காரணங்கள் இங்கே:

இரவில் ஆழ்ந்த தூக்கமின்மை:
நம்மில் பலர் அலுவலகத்தையும், அலுவலக வேலையையும், வீட்டிற்கு எடுத்துவருவார்கள்.அல்லது இரவில் வெகுநேரம் நண்பர்களுடனோ அல்லது உறவினர்களுடனோதொலைபேசியில் பேசியபடியோ அல்லது கணினியில் வேலை செய்து கொண்டோ அல்லது நள்ளிரவுவரை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்துக்கொண்டோ இருப்பார்கள். இவ்வாறு செய்வது நமது தூக்கத்தின் பிரதானநேரத்தை விழுங்கிவிடும்.அதாவது முன்னிரவு தூக்கம்தான் சோர்ந்து போயிருக்கும் நமதுநரம்புகளை புத்துணர்வுபெறவும், உடல் மீண்டும் சக்திபெறவும் உதவுகிறது. ஆனால் தொடர்ந்து இரவில் தாமதமாக தூங்கி,அதிகாலை எழுந்துவேலைக்கு ஓடுவதால்,உங்களது உடலில் உள்ள சக்தியெல்லாம் மதியத்திற்குள் உறிஞ்சப்பட்டுவிடுகிறது. அதனால்தான் மதியம் உடல் சோர்வுஏற்படுகிறது. எனவே ஒருவருக்கு நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 7 முதல் 8 மணிநேரம் தூக்கம் அவசியமானது.இவ்வாறு தூங்கும்போது மொபைல்போன்களை சுவிட்ச் ஆப் செய்துவைத்துவிடுவது இன்னும் சாலச்சிறந்தது.

## நரைமுடிக்கு முற்றுப் புள்ளி

நரைத்த முடி என்பது உலகம் முழுதும் பெரியசவாலக இருக்கிறது. இதனால் "ஹேர் டை" தொழிற்சாலை இன்று உலகஅளவில் மிகப்பெரிய சந்தையை உருவாக்கியுள்ளது. இதற்கு முற்றுப்புள்ளிவைப்போம், இன்னும் 4ஆண்டுகளில் வெளிவரும் ஒருமாத்திரைநரைக்கு முற்றுப்புள்ளிவைக்கும் என்று விஞ்ஞானிகள் சிலர் கூறியுள்ளனர்
பெயரிடப்படாத பழம் ஒன்றின் சாறிலிருந்து தயாரிக்கப்படும் மாத்திரை இன்னும் 4 ஆண்டுகளில் விற்பனைக்கு வந்துவிடும் என்று இந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். காஸ்மெடிக்ஸ் பொருட்களை உற்பத்திசெய்யும் முதன்மைநிறுவனமான ஓரியல் இந்த புதியமாத்திரையைகண்டுபிடித்துள்ளது. 10 ஆண்டுகள் இடைவிடாதஆராய்ச்சிக்குப் பிறகு இப்போதுநரைமுடிக்கு டாடா என்று இவர்கள் குதூகலத்துடன் தெரிவிக்கிறார்கள்.

800கோடி பவுண்டுகள் தொகைகொண்ட உலகின் "டை" சந்தைக்கு ஆப்புவைத்துள்ளதாக ஓரியல் நிறுவனம் பெருமைபட்டுக் கொண்டுள்ளது. ஆய்வில் ஈடுபட்ட அந்தநிறுவனத்தின்உயிரியல் துறைதலைவர் புருனோபெர்னர்ட், "இந்த புதிய நரைதடுப்பு மாத்திரைக்கு ஆண்கள் முதல் பெண்கள் வரை உலகம் நெடுகிலும் மிகப்பெரியசந்தை இருக்கு மென்று எதிர்பார்க்கிறோம். இது விலை அதிக மில்லை என்றும் தினசரி உணவு எடுத்துக் கொள்வதுபோல் இதனை எடுத்துக் கொண்டால் போதுமானது" என்றார். உடலில் உள்ள .தீங்கான புரோட்டின்களுடன் முடி செல்கள் வினையாற்றும் போதுநரைத்த முடி தோன்றுகிறது. தற்போது அடையாளம் தெரியாத இந்தப் புழத்திலிருந்து எடுக்கப்படும் சாறில் உள்ள ஒருசத்து முடி நரையை தூண்டிவிடும் சுரப்பியைஒத்ததாக இருப்பதை இந்தஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
"நரை முடி தோன்றுவதற்கு முன்னால் இந்த மாத்திரையைதினமும் எடுத்துக் கொண்டால் நரை ஏற்படுவதைதடுக்க முடியும். ஆனால் முடி நரைத்த பிறகு அதனைமீண்டும் கறுப்பாக இந்த மாத்திரை ஆக்குமா என்பதுசந்தேகமே" என்கிறார் பெர்னர்ட். 10 ஆண்டுகள் இந்தமாத்திரைசந்தையில் புழங்கிய பிறகே இதன் சக்திபற்றி தெரியவரும் என்று இவர்கள் கூறுகின்றனர்.2013ஆம் ஆண்டு மே மாதம் விஞ்ஞானமாநாட்டில் இது எப்படிதயாரிக்கப்பட்டது, இந்தவிஞ்ஞானிகளின் கோரலில் எந்தஅளவுக்கு உண்மை உள்ளது என்பது தெரியவரும். பிராட்ஃபோர்ட் பல கலையில் பணியாற்றிவரும்பேராசிரியர் டெஸ் டாபின் என்ற தோல்நோய் நிபுணர் இது பற்றி கூறுகையில், சுரப்பியைமாற்றினால் நரைநின்றுவிடும் என்பதுபற்றிதெளிவாக இல்லை. ஆனால் இந்த ஆய்வைமேற்கொண்டடாக்டர் பெர்னட் குழுவினருக்கு. இது பற்றிய அறிவு அதிகம், மயிர்க்கால்கள் எவ்வாறு வேலைசெய்கிறது என்பதில் இவர்கள் நிபுணர்கள்" எனதெரிவித்தார்

## துணையிடம் ஆசையை இப்படி சொல்லலாம்



என்னதான் நாகரீகம் வளர்ந்து போய் இருந்தாலும் சில விடயங்கள தொடர்பாக பேச பலர் இப்போதும் தயங்கத்தான் செய்கிறார்கள் தனது துணையை செக்ஸ் உறவுக்கு அழைக்க வாய் திறந்து கேட்கவா முடியும்? என்று சொல்பவர்களுக்கு இதோ சில சமூக கருத்துக்கள் படித்த அசத்துங்கள் .

நீங்கள் பெண்ணாக இருந்தால் இப்படிச் செய்து பாருங்கள்.. .சொக்க வைக்கும், உணர்ச்சியைத் தூண்டக் கூடிய உள்ளாடைகளுக்கு மாறுங்கள். நிச்சயம் உங்கள் ஆள் திசை திரும்புவார்.பாத்ரூமுக்குள் புகுந்து ஜில்லென்று ஒரு குளியல் போட்டு தலையில் ஈரம் சொட்டச் சொட்ட, ஒரே ஒரு துண்டை மட்டும் உடம்பில் கட்டிக் கொண்டு அப்படியே வாருங்கள். துண்டு நழுவப் போவது "இப்பவா, அப்பவா" என்ற ரேஞ்சுக்கு இருந்தால் இன்னும் பெட்டர். என்னதான் ஹிட்லர் டைப் ஆளாக இருந்தாலும் கூட இந்தக் கோலத்தைப் பார்க்கும் யாருக்குமே நிச்சயம் "மூட்" மாறும்.முடிந்தவரை படுக்கை அறையில் கருப்பு அல்லது சிவப்பு நிற உடையை அணியுங்கள். செக்ஸ் உணர்வைத் தூண்டுவதில் இந்த இரண்டு கலர்களுக்கும் ஏகப்பட்ட பங்கு இருக்கிறது. உங்களவரை நெருங்கி உட்கார்ந்து, அல்லது படுத்தபடி சற்றே செக்ஸியாக பேசுங்கள், சைகைகளை செய்யுங்கள். பேச்சை விட சைகைகளுக்கு நிறைய "பவர்" உண்டு. எனவே இது ஒர்க் அவுட் ஆகும். நெருங்கி உட்கார்ந்து கைகளால் அவரை தழுவுங்கள், மென்மையாக. சின்னச் சின்ன வருடல்கள், முத்தம், ஒற்றை விரலால் உடல் முழுவதும் நர்த்தனம் செய்யுங்கள். நிச்சயம் "பார்ட்டி" நெளிய ஆரம்பிப்பார். இப்படிச் சின்ன சின்னதாக செய்து உங்களவரை மூடுக்குக் கொண்டு வரலாம்.

இது பெண்களுக்கு. சரி, நீங்கள் ஆணாக இருந்தால், என்ன செய்ய வேண்டும்? பெண்ணின் உடலிலேயே செக்ஸ் உணர்வுகளைத் தூண்டக் கூடிய சில முக்கிய இடங்களில் முதுகும் ஒன்று. அங்கு உங்களது கை விரல்களை சில விநாடிகள் விளையாட விட்டால், நிச்சயம் பலன் கிடைக்கும்.உங்கள் பார்ட்னரின் காது மடல்களுடன் சில நிமிடம் விளையாடுங்கள். நெருங்கிச் சென்று லேசாக முனுமுனுத்தபடி பேசினாலே அவருக்கு நிச்சயம் மூட் கிளம்பி விடும். முத்தமிடுவது, நாவால் வருடுவது போன்றவையும் கூட கூடுதல் பலன் தரும். அதற்காக, காது ஜவ்வு கிழிந்து போகும்படி சத்தமாக மட்டும் பேசி விடாதர்கள்! பெண்ணின் கழுத்தில் நிறைய விடயம் இருக்கிறது. கைகளால் அங்கு நீங்கள் நர்த்தனம் ஆடினால், கழுத்தின் பின்பக்கத்தில் லேசாக முத்தமிட்டால், வருடிக் கொடுத்தால், மயங்காத பெண்ணும் மயங்குவார். உடனடி உறவுக்கான "பாஸ்போர்ட்" இந்த இடத்தில்தான் கிடைப்பதாக செக்ஸாலஜிஸ்ட்டுகள் கூறுகிறார்கள். உங்களவரின் கால்களை இதமாக பிடித்து விடுங்கள், பாதங்களில் மசாஜ் செய்யுங்கள், விரல்களை சொடுக்கி எடுங்கள்-வலிக்காமல். குதிகால், பாதம், முழங்காலின் பின்பகுதி ஆகியவற்றில் உங்கள் விரல்கள் விளையாடும் விதத்தைப் பொறுத்து வேகமான உறவுக்கு உத்தரவாதம் கூடும்.

இதுபோன்ற சின்னச் சின்ன வேலைகள் மூலம் மூடில் இல்லாதவர்களையும் கூட மாற்ற முடியும்

## தண்ணீர்... தண்ணீர்.....:)

**உடல் சம நிலையை பேண தண்ணீர் அளப்பரிய பங்காற்றுகிறது நேர சுமைகளை காரணம் காட்டி கிராமமாக நீர் குடிப்பதை தவிர்க்க வேண்டாம் இதோ உடல் நிறைக்கு ஏற்ப பருக வேண்டிய நீரின் அளவும் அதன் சில பயன்களும்**

50 முதல் 60 கிலோ எடை கொண்டவர்கள் 24 மணி நேர தேவைக்கு இரண்டரை லிட்டர் தண்ணீர் பருகவேண்டும். இது வெறும் தண்ணீர் மட்டும் என்றில்லை. காய்கறி, பழங்கள், ஜூஸ், கூட்டு, குழம்பு, சாம்பார் போன்றவைகளில் இருந்து கிடைக்கும் தண்ணீரையும் இந்த கணக்கில் சேர்த்துக்கொள்ளலாம்.

உடலில் இருந்து வெளியாகும் நீரை சமன் செய்வதற்காக தண்ணீர்பருகுகிறோம். ஒருவரது உடலில் இருந்து நாள் ஒன்றுக்கு ஒன்றரை லிட்டர் சிறுநீர் வெளியேறுகிறது. மலம் வழியாக 200 முதல் 300 மி.லி. தண்ணீர் வெளியேறுகிறது.
சுவாசம் வழியாக 300 முதல் 400 மி.லி. நீர் வெளியேறுகிறது. வியர்வை மூலம் 300 முதல் 400 மி.லி. வெளியேறுகிறது. இதை சரிக்கட்டத்தான் நாம் தினமும் இரண்டரை லிட்டர் தண்ணீர் பருக வேண்டியிருக்கிறது. கோடை காலத்தில் வியர்வை அதிகமாவதால் அதை ஈடுகட்டும் விதத்தில் பருகும் தண்ணீர் பொருட்களின் அளவை அதிகரிக்கவேண்டும்.
ஒருவருக்கு காய்ச்சல் ஏற்படும்போது அவர் உடலில் இருந்து வெளியேறும் வியர்வையின் அளவு அதிகரிக்கும். அப்போது உட்கொள்ள வேண்டிய தண்ணீரின் அளவினை அதிகரிக்க வேண்டும். கூடவே உடல் உஷ்ணத்தை தவிர்க்கவும் தண்ணீர் அதிகம் தேவைப்படும். கோடை காலத்திலும், காய்ச்சல் ஏற்படும் காலத்திலும் அதிகமான அளவு தண்ணீரை உட்கொள்ள வேண்டும். இப்போது கோடைகாலம் என்பதால் வெயில் அனலாய் கொளுத்துகிறது. மதிய நேரங்களில் வெளியில் தலைகாட்ட முடியவில்லை. இந்த வெயில் காலத்தில் தேவையான அளவு தண்ணீர் குடிக்காவிட்டால் டீஹைறடிரேஷன் என்கிற நீர்ச்சத்தின்மை பாதிப்பு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இந்த பாதிப்பு ஏற்பட்டால் மூளை, இதயம், சிறுநீரகம் ஆகிய உடலின் முக்கிய உறுப்புகள் பாதிக்கப்படும்.
டீஹைறடிரேஷன் ஆரம்ப நிலையில் இருந்தால் தண்ணீர் மற்றும் பழச்சாறு தேவையான அளவு எடுத்துக்கொள்வதன் மூலம் அந்த பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம். அதனால், தண்ணீர் நிறைய குடியுங்கள். முக்கியமாக, அதை சுத்தமாக குடியுங்கள். இந்த சீசனில் என்னென்ன பழங்கள் கிடைக்கின்றனவோ, அவற்றை வாங்கிச் சாப்பிடுங்கள்.

வெயிலில் அதிக நேரம் அலையாதீர்கள். அவ்வப்போது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். இதை நீங்கள் பின்பற்றினால் நீர்ச்சத்து குறைவால் ஏற்படும் பாதிப்புகள் வராது.

ILC Tamil presents

sponsored Lycamobile Call the world for less

# JUNIOR SUPER STAR NIGHT


SOUTH INDIAN LEADING TV CHANNEL VIJAY TV'S TOP RANKED JUNIOR SUPER SINGER'S AMAZING & UNBELIEVABLE PERFORMANCE

29TH OCT 2011, SAT 6PM
(DOOR OPEN - 5PM)
FAIRFIELD HALL
PARK LANE
CROYDON CR1 1DG

&

30TH OCT 2011, SUN 5.30PM
(DOOR OPEN - 5PM)
HARROW LEISURE CENTRE
CHRISTCHURCH AVE
HARROW HA3 5BD

TICKETS
£15
£20
£25
£50



DANCING VIBRATION
JOINING LONDON DANCE GROUPS

MUSIC BY
RAINBOW
WITH CHENNAI'S
LEADING KEYBOARDISTS

JUNIOR SINGERS
*NITHYA SHREE
*SRINISHA
*SHRAVAN
*PRIYANKA

COMEDY & MIMICRY

DONT MISS IT

FOR MORE DETAILS & CONTACT
0208 930 5341, 078 7780 4093, 079 1348 5990, www.ilctamil.com, E-mail: juniorsuperstars@ilctamil.com

A1 Money Transfer For Your Money Transfer Needs | JP&S Services Ltd | Accident courtesy | VENISONS OF WEMBLEY | Sri Soobana Jewellers | DOSA Special

DESIGNED BY GOKULNATH

# JUNIOR SUPER SINGER LONDON TICKET AVAILABLE PLACES

## 29TH SATURDAY AT FAIRFIELD EVENT TICKET SALES


1) SARASWATHI BAHAVAN –TOOTING
2) AYNGARAN VIDEOS-COLLIERS WOOD
3) VANIYAN SUPERMARKET-NEW MALDEN
4) EELAM VIDEO-CROYDON
5) BEST FOOD SUPERMARKET-LEWISHAM
6) SOUND AND VISION-MITCHAM
7) SEELANS SUPERSTORE-EASTHAM
8) BRINDEN VIDEO-WALTHAMSTOW
9) ANGELS SUPERMARKET-ILFORD
10) WATCH ME RESTAURENT-SOUTH WIMBLEDON

## 30TH HARROW LEISURE CENTER EVENT TICKET SALES

1) NEW KANNAN STORES-EDMONNTON
2) SARASWATHI BAHAVAN-WEMBLEY
3) GLOBAL VIDEO-SOUTH HARROW
4) SOUTH HARROW PARTY SERVICES-SOUTH HARROW
5) THAMILNI CASH AND CARRY-SOUTHALL
6) ASHLEY CASH AND CARRY-RAYNERS LANE
7) SEELANS SUPERSTORE-EASTHAM
8) BRINDEN VIDEO-WALTHAMSTOW
9) ANGELS SUPERMARKET-ILFORD

**FOR TICKET INFO PLEASE CALL ON 07754323969/07740172020**
**ILC ADMIN ON 0208 930 5341**
**YOU CAN CALL ILC AND PAY BY CARDS AND YOUR TICKETS WILL BE SEND BY POST.**

## அதிர்ச்சிகள் ஆச்சர்யங்களுடன் தொடரும் ஸங்காய் மாஸ்டர்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடர்



சீனாவில் நடைபெற்றுவரும் ஸங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் பல்வேறுபட்ட அதிர்சிகளையும் பல்வேறுபட்ட ஆச்சர்யங்களையும் கொடுத்துவருகிறது இந்த போட்டித்தொடரில் உலகின் முதல் தர வீரர் ரபேல் நடால் தோல்வியடைந்து அதிர்ச்சி கொடுத்தார் கடந்த பதினாராம் திகதி ஆஸ்ட்ரிய வீரர் மெல்சரிடம் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினார் நடால்
3 செட்களில் ர.ஃபேல் நடால் இந்த அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்தார். முதல் செட்டை மெல்சர் 6-1 என்று அதிரடியாகக் கைப்பற்ற ஆவேசமடைந்த நடால் இரண்டாவது செட்டை 6-3 என்று கைப்பற்றினார். ஆனால் மெல்சர் விடாப்பிடியாக விளையாடி மூன்றாவது செட்டில் 6-3 என்று வெற்றி பெற்றார். முன்னதாக ரோஜர் ஃபெடரர் இத்தாலி வீரர் ஆன்டிரியாஸ் செப்பியை 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.
இதனிடையே பிரித்தானிய வீரர் ஆண்டி முர்ரே நடைபெற்ற அரையிறுதியில் அதிரடியாக விளையாடி ஜப்பானின் கீ நிஷிகோரியை 6-3, 6-0 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று இறுதிக்கு முன்னேறினார் அதேவேளை நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதியில் லோபஸை 6-7 (5-7), 6-3, 6-3 என்ற செட்களில் போராடி வென்று ஸ்பெயின் வீரர் டேவிட் பெர்ரர் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார்.

## இங்கிலாந்துக்கு எதிராக இந்தியா ஆவேசம் முதல் போட்டியில் அபார வெற்றி




இந்தியாவின் பலி தீர்க்கும் படலம் என்றெல்லாம் ஆரம்பத்திற்கு முன்பே பரபரப்பான எதிர்பார்ப்பை தொட்ட இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேச தொடர் அதே பரபரப்புடன் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது இங்கிலாந்து மண்ணில் மண்ணை கவ்விய இந்திய அணியினர் அத்தனையையும் திருப்பி கொடுக்கும் முனைப்புடன் ஆவேசமாக போராடி வருகின்றது
ஐந்து ஒரு நாள் சர்வதேச தொடர்களை கொண்ட இந்த தொடரில் முதலாவது ஒருநாள் போட்டியில் பல்வேறுபட்ட சுவாரஸ்யமான புள்ளிவிபர மாற்றங்களுடன் இந்திய அணி அபாரமான வெற்றியை பெற்றுக்கொண்டது ஐதராபாத் டெக்கன் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி முன்னூறு ஓட்டங்களை குவித்தது இதில் அணித்தலைவர் தோனியின் அபாரமான எண்பத்தேழு ஓட்டங்களும் , சுரேஸ் ரைனாவின் அறுபத்தொரு ஓட்டங்களும் அடங்கும் பந்துவீச்சை பொருத்தவரைக்கும் இங்கிலாந்து அணி சார்பாக சொல்லிக்கொள்ளும் அளவுக்கு எதுவும் அமையவில்லை

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு அணித்தலைவர் குக்கை தவிர யாரும் கைகொடுக்காத நிலையில் வெறும் நூற்றி எழுபத்து நான்கு ஓட்டங்களுக்கு சுருண்டது குக் அறுபது ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்

இறுதியில் நூற்றி இருபத்தாறு ஓட்டங்களுடன் இந்திய அணி வெற்றிபெற்றது இப்போட்டியில் நடந்த சுவாரஷ்யமான புள்ளிவிபர மாற்றங்கள் இதோ
சுரேஸ்ரெய்னா 3,000 ஒருநாள் போட்டி ஓட்டங்களை கடந்த 16வது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுக்கொண்டார்
55 பந்துகளில் 61 ஓட்டங்களை விளாசிய சுரேஸ்ரெய்னா இங்கிலாந்துக்கு எதிராக 6வது அரைசதத்தையும் தன் சொந்தக் கணக்கில் 18வது அரைசதத்தையும் பெற்றுக்கொண்டார்
மகேந்திர சிங் டோனி அடித்த அரை சதம் அவர் தொடர்ச்சியாக அடித்த நான்காவது அரை சதமாகும் அதே நேரம் தோனி இங்கிலாந்துக்கு எதிராக முதல் ஆட்ட நாயகன் விருதைப் பெற்றுக்கொண்டதும் இந்த போட்டியில் தான். ஒருநாள் போட்டிகளில் இது 15வது ஆட்ட நாயகன் விருதாகும் இதில் இன்னுமொரு முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்னவென்றால் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் டோனி 10,000 ஓட்டங்களை கடந்ததும் இந்த போட்டியிலேயே
இந்தியா, இங்கிலாந்து ஒருநாள் போட்டிகளில் தோனி 20 பிடிகளை பிடித்து மேட் பிரையர் இந்தியாவுக்கு எதிராக செய்த சாதனையை இந்த போட்டியில் சமன் செய்ததும் குறிப்பிடத்தக்கது
ராஜீவ் காந்தி விளையாட்டரங்கில் இதுவரை 5 போட்டிகளில் விளையாடியுள்ள இந்தியா இந்த போட்டியிலேயே முதல் முறையாக வெற்றிபெற்றது
ஒருநாள் போட்டிகளில் இங்கிலாந்துக்கு எதிராக இன்னிங்ஸில் 300 ஓட்டங்களை எடுத்தது இந்தியாவுக்கு இது 8வது முறையாகும்

இப்படி பல சுவாரஸ்யமான புள்ளிவிபர மாற்றங்களுடன் நிறைவடைந்த முதல் போட்டியை தொடர்ந்து அடுத்தடுத்த போட்டிகளிலும் இந்திய அணி இங்கிலாந்துக்கு சவாலாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

## டென்னிஸ் தரவரிசை: முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்ட ஜோகோவிக்



டென்னிஸ் தரவரிசை: முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்ட ஜோகோவிக் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் தரவரிசையில் செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் இந்த ஆண்டு இறுதிவரை முதலிடத்திலேயே இருப்பார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ள ஸ்பெயின் வீரர் நடால், ஷாங்காய் ஓபன் டென்னிஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் தோல்வியடைந்து வெளியேறினார். இதனால் அவரால் இந்த ஆண்டு இறுதிவரை ஜோகோவிச்சை பின்தள்ள முடியாது.
24 வயதாகும் ஜோகோவிச் கடந்த ஜுலையில் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் வென்ற போது முதலிடத்தைப் பிடித்தார்.
அப்போது முதல் முதலிடத்தையே தக்கவைத்துக் கொண்டுள்ளார். இந்த ஆண்டில் அவுஸ்திரேலிய ஓபன், அமெரிக்க ஓபன் உள்பட 10 பட்டங்களை அவர் வென்றுள்ளார். அதேவேளை ஜப்பான் ஓபன் டென்னிஸ் போட்டியில் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார் அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசுர். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவின் சானிலியை 6-2,6-3 என்ற செட் கணக்கில் அவர் வென்றார். சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் இப்போது 6-வது இடத்தில் இருக்கும் சமந்தா, அரையிறுதியில் பெட்ரோவா அல்லது ஜி கியாங்கை எதிர் கொள்வார். இந்த இருவர் இடையிலான காலிறுதிப் போட்டி மழையால் பாதியிலேயே தடைபட்டது.
பிரான்ஸ் வீராங்கனைமரியன் பர்தோலியும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். அவர் ஜப்பானின் அயூமியை 6-2,6-1 என்ற செட்கணக்கில் வென்றார். ஜேர்மன் வீராங்கனை ஏஞ்சலிக்கை அவர் அரையிறுதியில் எதிர்கொள்கிறார்.

## ஐந்தாவது ஐபிஎல் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் இடம் பெறவில்லை


ஐந்தாவது ஐபிஎல் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் இடம்பெறவில்லை: பிசிசிஐ ஐந்தாவது இந்தியன்பிரீமியர் லீக்(ஐபிஎல்) கிரிக்கட் போட்டி 2012 ஏப்ரல் 4 முதல் மே 27 வரை நடைபெறவுள்ளது. தொடக்க விழா ஏப்ரல் 3ம் திகதியும், முதல் ஆட்டம் ஏப்ரல் 4ம் திகதியும் நடைபெறுகிறது. இவை இரண்டுமே சென்னையில் தான் நடைபெறுகிறது.பாகிஸ்தான் வீரர்களுக்கு இந்த ஐபிஎல் போட்டியிலும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இந்த விஷயம் குறித்து கூட்டத்தில் விவாதிக்கபடவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹைதராபாதில் நடைபெற்ற ஐபிஎல் நிர்வாகக் குழு கூட்டத்துக்குப் பின் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. ஐபிஎல் புதிய தலைவர் ராஜீவ் சுக்லா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. 2012ம் ஆண்டு ஐபிஎல் போட்டியில் 9 அணிகள் மட்டுமே பங்கேற்கும். கடந்த ஐபிஎல்-லில் 10 அணிகள் பங்கேற்றன. கடந்த மாதம் கொச்சி அணியின் உரிமம் ரத்து செய்யப்பட்டது.


அதனால் அந்த அணி அடுத்த ஆண்டு ஐபிஎல் போட்டியில் பங்கேற்க முடியாது. அந்த அணியில் இடம் பெற்றிருந்த விவிஎஸ் லட்சுமணன், ஸ்ரீசாந்த், முத்தையா முரளீதரன், ஜெயவர்த்தனா உள்ளிட்டோர் மீண்டும் ஏலம் விடப்படுவார்கள் என்று தெரிகிறது. பிசிசிஐ வெளியிட்டுள்ள செய்தியில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யூரோ கிண்ண போட்டித்தொடரில் ரூனே விளையாட தடை

2012ல் நடக்கவுள்ள யூரோ கோப்பை கால்பந்தாட்ட தொடருக்கான தகுதி சுற்று போட்டியில் இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் ரூனே முறையில்லா ( பவுல் ) ஆட்டத்தை வெளிப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் சிகப்பு கார்ட் காட்டப்பட்டு போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார் இதையடுத்து வரும் யூரோ கோப்பை தொடரில் இங்கிலாந்து அணி பங்கேற்கும் மூன்று லீக் போட்டிகளிலும் ரூனே விளையாட தடை விதிக்கப்பட்டது.
இது இங்கிலாந்து ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


DEEPAM TV
காலைக்கதிர்
செய்திகள்
NEWS
பிடிக்கல... பிடிக்கல...
சதுரங்கம்
தீபம்
www.deepamtv.tv
QUALITY TAMIL MEDIA


## நட்சத்திரங்கள் மோதுவதால் உருவாகும் காமா கதிர்களால் ஆபத்து



வான்வெளியில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு நட்சத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதால் அதில் இருந்து பல டன் சக்தி வாய்ந்த காமா கதிர்கள் உருவாகுகின்றன. அதிக நச்சுத்தன்மை வாய்ந்த கதிர் வீச்சினால் பூமி அழியும் விடும் ஆபத்து ஏற்படுகிறது என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இதற்கு முன்பு மேற்கொண்ட ஆய்வில் காமா கதிர்களின் கதிர் வீச்சு பூமியின் மேற்பரப்பில் உள்ள ஓசோன் படலத்தை முழுமையாக வற்றிப் போக செய்யும் என தெரியவந்தது. இதனால் சூரியனின் அல்ட்ரா வயலட் கதிர்கள் நேரடியாக பூமியில் விழும். அதனால் பூமியில் வாழும் உயிரினங்களின் மரபு தன்மையில் மாற்றம் ஏற்பட்டு அவை அழியும் என தெரிவித்து இருந்தனர்

## சந்திரனில் அதிகமாக காணப்படும் டைட்டேனியம்



சந்திரனில் அதிகளவு டைட்டேனியம் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அமெரிக்காவின் மூலம் சந்திரனில் ஆராய்ச்சி மேற்கௌள்ள அனுப்பப்பட்ட லூனார் ரிக்கான்ஸியன்ஸ் ஆர்பிட்டர் என்ற விண்கலம் அனுப்பப்பட்டது. அதில் பெருத்தப்பட்ட கேமராக்களால் 7 வித்தியாமான ஒளி அலைகளில் எடுக்கப்பட்ட படங்களை விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்தனர்.

மேலும் இந்த படங்களை கடந்த 1972ம் ஆண்டு, அப்பேலே 17 என்ற விண்கலம் மூலம் விண்வெளி வீரர்களால் கெண்டு வரப்பட்ட சந்திரனில் இருந்து எடுக்கப்பட்ட பாறை படிவங்களுடன் ஒப்பிட்டு பார்த்தனர். பல அதிர்ச்சி மிகுந்த தகவல்கள் கிடைத்துள்ளன.இதுகுறித்து அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழக விஞ்ஞானி மார்க் ராபின்சன் கூறியதாவது, சந்திரனை பூமியில் இருந்து பார்த்தால் சாம்பல் நிறம் பூசியது பேல தேற்றம் அளிக்கிறது. ஆனால் தகுந்த கருவிகளுடன் பார்த்தால், சந்திரன் பல நிறங்களில் ஒளிர்வது தெரியும்.இதன்மூலம் சந்திரனில் பல வேதிப் பெருட்கள் உள்ளதை புரிந்து கெள்ள முடிகிறது. பூமியில் உள்ளதை விட, இரும்பு மற்றும் டைட்டானிய தாதுக்கள் சந்திரனில் அதிகளவில் காணப்படுகிறது. டைட்டானியம் என்பது இரும்பை விட உறுதியானது. ஆனால் எடை குறைந்தது. இதனால் அதிக விலை மிக்கதாக உள்ளது.

இதேவேளை பூமியில் ஒரு வீதத்திலும் குறைவாக காணப்படும் தய்ட்டேனியம் சந்திரனில் பத்து மடங்கு காணப்படுவது விஞ்ஞானிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது . மேலும் சந்திரனில் ஆக்சிஜன், ஹைட்ரஜன், ஹீலியம் உள்ளிட்ட வாயுக்களும் உள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன, என்றார்.

## வருகிறது தொட்டுப்பார்க்கும் வசதி கொண்ட ஆன்லைன் ஷாப்பிங்

கடைகளுக்கு சென்று நாளின் பாதியை அங்கேயே செலவழித்துவிட்டு பொருட்களை தேடி தேடி வாங்கும் காலம் மலையேறிவிட்டது இப்போ எல்லாம் அதற்கான நேரமும் இல்லை இருந்தாலும் ஓய்வேடுக்கவே அந்த நேரம் சரி என்றாகிவிடுகிறது இதனால் ஆன்லைன் மூலம் ஷாப்பிங் செய்யும் வழக்கம் உலகில் பலரிடம் பரவியது ஆனால் வெறுமனே பார்வையில் மட்டும் பார்த்துவிட்டுஆன்லைனில் ஆடர் செய்து பிறகு வாங்கிய பொருளில் திருப்பதி இல்லாமல் கவலைப்பட்ட பலருக்கு இதோ வருகிறது தொட்டுப்பார்க்கும் வசதி கொண்ட ஆன்லைன் ஷாப்பிங்.

பேஸ்ட், பிரஷ், சோப், கமெரா, பீரோ, கட்டில் ஆகியவற்றை ஒன்லைன் ஷாப்பிங்கில் வாங்குவதில் பிரச்னை இல்லை. ஜவுளி என்றால், ஆயிரம் தான் டிஸ்பிளேயில் தெரிந்தாலும் முந்தானை உள்பட முழு புடவையின் டிசைனையும் பார்க்க முடிந்தாலும், புடவையை தொட்டுப் பார்த்து வாங்கினால் தான் பெண்களுக்கு திருப்தி.

ஓன்லைனில் எப்படி தொட்டுப் பார்த்து வாங்குவது சாத்தியம் என்கிறார் ஷரோன் பர்லே. லண்டனின் ப்ருனல் பல்கலைக்கழகத்தில் டிசைனிங் துறையில் பேராசிரியராக இருக்கிறார்.இவரது தலைமையில் டிசைனிங் மற்றும் இணையதள நிபுணர்கள் கொண்ட குழுவினர் டிஜிட்டல் சென்சோரியா என்ற தலைப்பில் ஒரு ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

ஆராய்ச்சி பற்றி ஷரோன் கூறியதாவது:

**அனிமேஷனில் ஒரு வகை ஸ்டாப் மோஷன் அனிமேஷன். அதாவது பொம்மைகளை கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்தி ஒவ்வொரு பொசிஷனையும் படமெடுத்து அதை படமாக ஓட்டுவது. இந்த டெக்னிக்கையும் தொடுதிரை(டச் ஸ்கிரீன்) தொழில்நுட்பத்தையும் இணைத்து புதுவித தொழில்நுட்பம் உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோம். ஐபோன், ஐபேட், டேப்லட் கணனிகளின் டச் ஸ்கிரீன் உதவியுடன் நிஜத்தில் துணியை தொட்டுப் பார்ப்பது போன்ற உணர்வை பெற முடியும். அடிப்படை தொழில்நுட்பம் தயாராகிவிட்டது. அதை மேம்படுத்தி மெருகூட்டுவதற்கான ஆய்வு நடந்து வருகிறது என்றார்.**

## மருத்துவ தேவைகளிலும் எதிர்காலத்தில் கைபேசிகள் !



க்கையடக்க தொலைபேசியின் சில தொழிநுட்ப முறைகளை மாற்றி அமைப்பதன் மூலம் அவற்றை .மருத்துவ தேவைகளுக்காக பயன்படுத்த முடியும் என்று சொல்கின்றனர் வோசெஸ்ரரின் பொலிரெக்னிக் நிறுவனத்தின் ஆய்வாளர்கள் கையடக்கத் தொலைபேசிகளை இதயதுடிப்புஅறியும் ஸ்டேதர்ஸ்கார்ப் கருவி மற்றும் நுணுக்கு காட்டியாகவும் மாற்றமுடியுமெனக் கூறியுள்ளனர். ஒரு மோட்டரோலா அன்றொய்ட் கைத்தொலைபேசியின் கமெராவில் நோயாளியொருவரின் விரலை அழுத்தும்போது அவை குருதியிலுள்ள ஒட்சிசன் மட்டங்கள், சுவாசத்துடிப்புகள் உட்பட குருதியோட்டத் தகவல்கள் என்பற்றை வைத்தியசாலையில் பயன்படுத்தப்படும் பாரிய, பெறுமதிமிக்க திரைகளைப் போலவே துல்லியமாகப் பதிந்து காட்டின. வேறுசில ஆய்வாளர்கள iPhone ஐ ஒரு நுண்ணறிகருவியாக் பயன்படுத்திச் செய்துகாட்டினர்.

இதன்போது நீங்கள் பசியுடன் உள்ளீர்களா என்பதைப் பரிசோதிக்கும் ஒரு மென்பொருளும் இருந்தது. மோட்டரோலா அன்றொய்ட் கைத்தொலைபேசிகளின் கமராவின்மீது ஒரு ball lense எனப்படும் வில்லையை வைத்துப் பதியும்போது அது ஒரு மருத்துவ நுண்ணறிகருவி வேலைசெய்வதுபோல விம்பங்களைப் பெருப்பித்துக் காட்டியது.

அதில் குருதிக்கலங்களின் வேறுபாட்டையும் காணக்கூடியதாயிருந்தது. வைத்தியர்கள் பயணிக்கும்போது கொண்டுதிரியப் பயனுள்ளதாக இது இருக்கலாம். இவற்றைப் பொதுவாக ஒரு நோயாளிக்கு சுயபரிசோதனைக்காகக் கொடுக்கலாமென்றும் மேலதிகமான தேவைகள் எதுவுமின்றி சிறியளவில் பரிசோதனைகளை மேற்கொள்ள உதவுமென்றும் இவ்வாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மாணவர்களின் அறிவுத்திறனை பரிசோதிக்கும் போட்டிகளை நடத்த யூடியூப் திட்டம்

### லெனோவா நிறுவனமும் கைகோர்த்துள்ளது




உலகம் முழுவதும் மிகப்பிரபலம் பெற்ற யூடியூப் தற்போது மாணவர்களின் அறிவுத்திறன் மற்றும் நுணுக்கமான செயற்பாட்டு திறனை அதிகரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது கணிதம் மற்றும் அறிவியல் விஞ்ஞான துறைகளில் ஆர்வத்தை ஏற்படுத்தும் இந்த திட்டத்தில் யூ டேயுப் உடன் லெனோவா நிறுவனமும் கைகோர்த்துள்ளது உலக அளவில் நடக்கவுள்ள இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவர்கள் விண்வெளியில் பறக்கவுள்ளனர். ஸ்பேஸ் லேப் என இப்போட்டிக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது

இதில் உலகம் முழுவதிலும் உள்ள 14 முதல் 18 வயதுக்குட்பட்ட மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். விண்வெளியில் சுற்றிவரும் ஆய்வு மையத்தின் புவிஈர்ப்பு விசை முற்றிலும் இல்லாத சூழலுக்கு மாணவர்கள் உட்படுத்தப்பட்டால், அங்கு எவ்வகையான ஆய்வுகளை அவர்களால் மேற்கொள்ள இயலும் என்பது குறித்த 2 நிமிட வீடியோவை மாணவர்கள் உருவாக்க வேண்டும் என்பதே போட்டியின் முக்கிய நிபந்தனை.இதில் வெற்றி பெறும் 2 மாணவர்கள் விண்வெளிக்கு அழைத்துச்செல்லப்படுவர். அவர்களின் பரிசோதனைகள் விண்வெளி ஆய்வு மையத்தில் செய்து காண்பிக்கப்படுவதுடன், அவை யூடியூப் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**மாணவர்கள் தங்களின் பரிசோதனை வீடியோக்களை யூடியூப் மூலமாக வரும் டிசம்பர் 7ம் திகதிக்குள் அனுப்ப வேண்டும். உலகம் முழுவதிலும் இருந்து வரும் வீடியோக்களில் இருந்து, வரும் ஜனவரி 3ம் திகதி 60 சிறந்த வீடியோக்கள் தேர்ந்தெடுக்கப்படும்.**

மாணவர்களிடையே அறிவியல், கணிதம் மற்றும் பொறியியல் துறைகளில் ஆர்வத்தை ஏற்படுத்தும் விதமாக இப்போட்டி நடத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ள ஒருங்கிணைப்பாளர்கள், இப்போட்டி மாணவர்களுக்கு ஒரு அறிவியல் மூலதனமாகவும் இருக்கும் என்றும் தெரிவித்தனர்.

இவற்றில் இருந்து சிறந்த 6 வீடியோக்களை தேர்ந்தெடுக்கும் பணியில் மிகச்சிறந்த விஞ்ஞானிகள் ஈடுபடுத்தப்படுவர். மாபெரும் வானியல் வல்லுநரான ஸ்டீபன் ஹாக்கின்ஸ், நாசாவின் பில் கிரெஸ்டென்மியர் உள்ளிட்டோர் அவர்களில் சிலர்.60 வீடியோக்களில் இருந்த தேர்ந்தெடுக்கப்படும் 6 பேர், ஜீரோ கிராவிட்டி என்று அழைக்கப்படும் புவியீர்ப்பு சக்தியற்ற அனுபவங்களை பெறுவர். மேலும் அவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படும்.

இந்த 6 பேரில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு பேர், ஒருவர் 14 முதல் 16 வயதுடையவராகவும், மற்றொருவர் 17 முதல் 18 வயதுடையவராகவும் இருப்பார். இவர்கள் 2 பரிசுகளில் ஒன்றை தேர்ந்தெடுக்கலாம்.ஒன்று அவர்கள் ஜப்பான் சென்று, தங்களது பரிசோதனைகளை நேரில் காண்பது. இரண்டாவது அவர்கள் 18 வயதான பின் ரஷ்யாவில் உள்ள விண்வெளி ஆய்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெறுவது. இதில் பயிற்சி பெறும் மாணவர்கள் விண்வெளி செல்லவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்.

# கூட்டமைப்புக்கு அமரிக்கா கொடுத்துள்ள ராஜதந்திர அங்கீகாரமும் அம்பலமாகும் மேற்குலகின் இரட்டைவேட அரசியலும்

பரபரப்புக்கு கொஞ்சமமும் குறைவில்லாமல் நிறைவடைந்திருக்கிறது குட்டித்தேர்தல் கொழும்பை தவிர அணைத்து பிரதேச தேர்தல் முடிவுகளும் ஏற்கனவே எதிர்பார்த்தது போலவே அமைந்தது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தம் பலத்தை மீண்டும் நிருபித்துள்ளது இது தவிரவும் மீண்டும் ஐக்கியதேசிய கட்சி தம் வாக்கு வங்கியில்சரிவை கண்டுள்ளது ஆனால் கொழும்புமாநகர சபையின் அறுபதாண்டு கால ஆட்சியை தக்க வைத்துகொள்ள முடிந்ததன் மூலமாக கொஞ்சம் தம்மை ஆசுவாசப்படுத்திக்கொண்டுள்ளது

தலை நகர் கொழும்பை பொருத்தமட்டில் அங்கு சிங்களவரை விடவும் சிறுபான்மையினரின் ஆதிக்கமே அதிகம் என்பது அனைவரும் அறிந்ததே எனவே மீண்டும் தமிழர்கள் உலகத்திற்க்கு தாம் அணைத்து தேர்தல்களிலும் சொல்லும் செய்தியினை உரக்க கூறியுள்ளனர்

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு, கொழும்பு மாநகர சபையில் 6 ஆசனங்களும், தெஹிவளை கல்கிஸை மற்றும் கொலன்னாவையில் தலா ஒரு ஆசனமும் கிடைத்துள்ளன கொழும்பில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால், மனோ கணேசனிடமுள்ள ஆறு ஆசனங்களைப் பெறுவதில் அக்கட்சி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பின் மனோ கணேஷன் சில நிபந்தனைகளை விதித்ததனால் தனித்து செயற்பட போவதான தொனியில் தம் கருத்துக்களை வெளியிட்டுவருவதும் அறிந்ததே

ஏற்கனவே வடக்கில் நடந்த தேர்தலில் தமிழர்கள் சொன்ன அதே செய்தியை மீண்டும் ஆளும் வர்க்கத்திற்கு தலை நகரில் சொல்லியிருப்பதை ஆளும் வர்க்கம் உணர்வதாய் தெரியவில்லை மாறாக மீண்டும் பல முனைகளில் இருந்து பலரிடம் பேரம் பேசும் செயற்பாடுகள் அமோகமாய் நடந்துகொண்டிருக்கின்றது

இது இவ்வாறிருக்க பிரித்தானிய அரசியலிலும் அண்மைய நாட்களில் சில பல விறுவிறுப்பான சம்பவங்கள் அரங்கேறி அடங்கியுள்ளன பிரித்தானிய பாதுகாப்பு செயலர் லியம் பாக்ஸ் இன் ஆலோசகர் என்ற அடையாளத்துடன் இருந்து வந்த அடம் வேர்ரிட்டி என்றவர் ஒரு சாதாரண பிரஜை என்ற உண்மை வெளியானதும் பாரிய சர்ச்சைகளுக்கு லியம் பாக்ஸ் உம் பிரித்தானியாவும் முகம் கொடுக்க ஆரம்பித்துள்ளன இறுதிப் போரில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக சுயாதீன விசாரணை யொன்று நடைபெற வேண்டுமென பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுத்த அதேவேளை, பாதுகாப்புச் செயலாளர் லியம் பொக்ஸ் இலங்கை ஆட்சியாளர்களுடன் சுமுகமான உறவொன்றைப் பேணி வருவது இலங்கை தொடர்பாக பிரித்தானியாவின் இரட்டை வேட நிலைப்பாட்டை வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது.

ஆனால் லியம் பொக்ஸ் வெளிநாடுகளுக்கு தனது உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொள்ளும் போது, அவருடைய நண்பர் அடம் வெற்றிரி கூடவே செல்வது சென்றது எதற்காக எனும் கேள்வி பரவலாக எழுப்பப்பட்டுவருகிறது கடந்த ஒன்றரை வருடங்களில் 14 தடவை பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்துள் அவர் பிரவேசித்துள்ளதாக கூறப்படுகின்றது.

அடம் வேர்ரிட்டி அரச உத்தியோகத்தரோ அல்லது பெரும் பழைமைவாதக் கட்சியைச் சேர்ந்தவரோ அல்லர். அவர் வெறுமனே லியம் பாக்ஸ் இன் நண்பர் மட்டுமே இதனிடையே இரண்டு விதமான சந்திப்புகளை மேற்கோள் காட்டி இவ்விவகாரம் கிளப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. கடந்த ஜூனில், வர்த்தகரான ஹாவே பௌல்டர் (HARVEY BOULTER) உடனான, லியம் பொக்ஸின் துபாய் சந்திப்பிற்கு இடைத்தரகராக வெறிற்ரி தொழிற்பட்டாரென்கிற குற்றச்சாட்டு முதன்மையானது.

இவை தவிர இலங்கை ஜனாதிபதியை லியம் பொக்ஸ் சந்தித்தவேளையிலும் இவர் உடனிருந்ததாக புகைப்பட ஆதாரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஏற்கனவே இலங்கை ஆட்சியாளர்களோடு லியம் பொக்ஸூம் அவரது நண்பர் அடம் வெறிற்ரியும் உறவு கொண்டுள்ள விவகாரத்தை சனல் 4 தொலைக்காட்சியும் அம்பலப்படுத்தியுள்ளது லியம் பாக்ஸ் ஏற்கனவே பதவி விலகிவிட்டார் ஆனால் அவரும் அவர் நண்பர்களும் மேற்கொண்ட விஜயங்களையும். விஜயங்களில் லியம் பாக்ஸ்இன் நண்பர் எதற்காக பயன்படுத்தப்பட்டார் போன்ற விடயங்கள் பிரித்தானிய உயர் பீடத்திற்கு தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை அப்படி தெரியாது என்று பூசி மெழுகவும் பிரித்தானிய அரசினால் முடியாது இவ்வாறானா ஒரு சூழ்நிலையில் போர்க்காலங்களிலும்



அதன் பிற்பட்ட காலங்களிலும் சரி சர்வதேச அரசியல் முக்கியஸ்தர்கள் பலர் இலங்கை தமிழர் விவகாரத்தில் இரட்டை வேடம் பூண்டார்களா என்ற கேள்வியும் பல தமிழர் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது குறிப்பாக லியம் பாக்ஸ் ஆயுத ரீதியான உதவிகளையும் இலங்கைக்கு செய்தார் என்ற செய்திகளும் அவ்விரக்திக்கு இன்னும் வலு சேர்த்துள்ளது

இப்படி மேற்குலக அரசியல் வாதிகளின் இரட்டை வேடங்கள் வெளிவருவதனால் விரக்தி தமிழர்களுக்கு மட்டுமல்ல ஐ நா வின் செயலாளர் பாண் கீ மூன் இற்கும் இவ்விவகாரம் தலையிடியை கொடுத்துள்ளது எந்த நிலைப்பாட்டினை எடுக்க வேண்டுமென்பதை அறியாமல் இப்போது அவர் தடுமாறுவதையும் காணலாம். நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக இலங்கைஅரசின் பதிலை நீண்ட நாட்களாக எதிர் பார்த்துக் காத்திருப்பதை சலிப்புறாமல் சொல்கிறார் பான் கீ மூன். ஆனாலும் பான் கீ மூனிற்கு பதிலளிக்காமல், சொந்த ஆவணப்படமொன்றைத் தயாரித்து, சனல் 4 தொலைக்காட்சிக்கு பதிலளித்துக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு. அதை உலக நாடுகள் பலவற்றில் ஒளியேற்றப்போய் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் கிடைக்காமல் மூக்குடைபடும் சம்பவங்களும் நடக்காமல் இல்லை .

இதனிடையே இதுவரையில் டெல்லிக்கு மட்டுமே ராஜதந்திர பயணங்களை மேற்கொண்டு வந்த தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு முதல் தடவையாக மேற்கின் தலைமை பீடமான அமரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளது ராஜதந்திர ரீதியில் அதி முக்கியத்துவம் கொண்ட ஒரு விஜயமாகவே இவ்விவகாரத்தை பார்க்கவேண்டியுள்ளது.



அமரிக்க ராஜங்க திணைக்களத்தின் அழைப்பின் பேரிலேயே கூட்டமைப்பின் உயர் மட்டக்குழு இவ்விஜயத்தினை மேட்கொண்டுள்ளது இதனால் இலங்கை அரசும் இலங்கை விவகாரம் சர்வதேச விவகாரம் ஆகிவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துவரும் இந்தியாவும் கொஞ்சம் சலனம் அடைந்துள்ளதை காணலாம்

இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரை தமிழ் தேசிய கூட்டமைப்பை அது எப்போதும் சந்தேகத்துடனேயே பார்த்து வருகிறது தமிழர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் ஏக பிரதிநிதிகள் என்ற அந்தஸ்த்து அதற்க்கு சர்வதேசம் கொடுத்து விடக்கூடாது என்பதில் கவனமாய் இருக்கின்றது அமரிக்காவின் இந்த அழைப்பு கூட்டமைப்புக்கு ஒரு சர்வதேச அங்கீகாரத்தையும் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக சர்வதேசம் ஏற்றுக்கொளவதான ஒரு தோற்றப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது

புலம்பெயர் நாடுகளில், உலகத்தமிழர் பேரவை மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் போன்ற அமைப்புகள் இருந்தாலும், பேரவையின் உருவாக்கத்தின் போது பிரித்தானிய அரச உயர் மட்டத்தினர் கலந்து கொண்ட நிகழ்வு, மற்றும் அண்மையில் ரொபேர்ட் ஓ பிளேக்கின் அமெரிக்காவிற்கு பேரவையை அழைத்துப் பேசிய விடயமும் பலரால் அவதானிக்கப்பட்டது. டெல்லி இராஜதந்திர வட்டாரத்தில் உலகத் தமிழர் பேரவை மேற்கொண்ட தொடர்பாடல்கள், இந்தியா இலங்கையை எச்சரிக்கும் விதத்தில் மேட்கொண்டவையே ஆனால் அதில் இன்னுமொரு பக்கமும் உள்ளது

அதாவது புலம் பெயர் அமைப்புகள் எந்த காரணம் கொண்டும் தமிழகத்தை நேரடியாக தொடர்பு கொள்ளக்கூடாது என்பதில் இந்திய மத்தி தெளிவாக உள்ளதை காணலாம் கடந்த செவ்வாயன்று தமிழ்நாடு சென்ற உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இமானுவல் அடிகளார், சென்னை விமான நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட விவகாரத்தை இதற்க்கு சிறந்த உதாரணமாக கொள்ளலாம் அதாவது புலம் பெயர் தமிழர்கள் மற்றும் அவர்களின் அமைப்புகள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் தெளிவான ஒரு திட்டமிடலுடன் செயற்படுவதாக தெரிகின்றது

கூட்டமைப்பை அமெரிக்க அழைத்ததன் பின்னணியில் தமிழர்கள் முழுமையாக சந்தோசப்பட முடியாது காரணம் போற்குற்ற விசாரணைகள் தொடர்பில் கூட்டமைப்பை விடவும் புலம்பெயர் அமைப்புகளே சர்வதேசத்திற்கும் இலங்கை அர்சுக்கும் பாரியதொரு நெருக்குதலை கொடுத்து வருகின்றது அவ்வாறான ஒரு சூழ்நிலையில் கூட்டமைப்பை சர்வதேசம் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக அங்கீகரிப்பது போன்றதான தோற்றப்பாடு மூலம் புலம் பெயர் அமைப்புகளை பின்தள்ள முயற்சிப்பதாகவும் இவ்விவகாரத்தை தமிழர்கள் பார்க்க வேண்டும்.

இவ்வாறான அங்கீகாரத்தை கொடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் புலம் பெயர் அமைப்புகளுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் விரிசலை உருவாக்கும் முயற்சிகளிலும் மேற்குலகம் முயலலாம் , கூட்டமைப்பு என்னதான் சொன்னாலும் சம காலத்தில் அதனால் இலங்கைக்குள் ஒரு எல்லையினை வகுத்தே செயற்பட முடியும் எனவே புலம் பெயர் அமைப்புகள் பின்தள்ளப்பட்டால் எதிர்காலத்தில் தமிழர்களின் உண்மை கனவுகள் சிதைக்கப்படும் அபாயமும் உள்ளது

இலங்கை அரசாங்கம் கூட்டமைப்புக்கு விட்டுக்கொடுப்பதும் புலிகளுக்கு விட்டுக்கொடுப்பதும் ஒன்று என்ற அடிப்படையிலேயே தமது கருத்துக்களை முன்வைக்கின்றது இலங்கைக்குள்ளும் கூட்டமைப்பு எடுக்கும் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் முழு வீச்சில் எதிர்ப்பை காட்டுகின்றது வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பயங்கரவாத தடைச் சட்டத்தில் இணைக்கப்பட்ட விடயங்களுக்கெதிராக கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜா தொடுத்த அடிப்படை உரிமை மீறல் மனு, உயர் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்ட விடயம் இதனை தெளிவாக உணர்த்தும்

சமகாலத்தில் கூட்டமைப்புக்கு அமரிக்க கொடுத்துள்ள இந்த அங்கீகாரத்தை கூட்டமைப்பு எப்படி பயன்படுத்த போகின்றது என்பதே இங்குள்ள மிக முக்கிய கேள்வி ஒரு அங்கீகாரத்துடன் இலங்கை இன விவகாரத்தை சர்வதேச அரங்கத்திட்க்கு நகர்த்த கிடைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொன்னான சந்தர்ப்பம் இது கூட்டமைப்பு இதை பயன்படுத்திக்கொள்ளுமா?

# TV SWITCHOVER CAMPAIGN LAUNCHES

## TV switchover help is at hand




The campaign to prepare viewers in London for digital TV switchover gets underway this month (September 2011).

Starting on 4 April 2012, analogue TV signals will be turned off and Freeview digital channels made available to thousands of extra homes for the first time. Any television currently using an aerial will need to be converted to digital to continue receiving programmes. The campaign will explain what viewers need to do and their options for digital TV.

Digital UK is the independent body co-ordinating the campaign and will use local advertising, roadshows and community events to spread the message. A Switchover Help scheme has been put in place to help viewers make the switchover.

The Switchover Help Scheme will be sending out letters offering eligible older and disabled people practical help to switch one TV in their household to digital. The Help Scheme provides:

1) Easy-to-use equipment to convert one TV set

2) An approved installer to supply and install the necessary equipment, and

3) A 12 month aftercare service including a free helpline.

People are eligible for the Help Scheme if they are aged 75 or over, have lived in a care home for six months or more, get (or could get) certain disability benefits, or are registered blind or partially sighted. The service costs £40 but is free for people who are eligible and also receive pension credit income support, income-based jobseeker's allowance or income-related employment and support allowance.

The Digital UK website and advice line provides viewers with all they need to know about the switchover in their area.

Digital UK : 08456 50 50 50 (English) 0845 6063963, digitaluk.co.uk

Switchover Help Scheme: 0800 40 85 900, helpscheme.co.uk

# பிரித்தானியாவின் Big Ben மணிக்கூட்டுக் கோபுரம் சரிவடையும் அபாயம்



இங்கிலாந்தின் லண்டனின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படும் டீபை டீநெ மணிக்கூட்டுக் கோபுரம் சரிடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பீசா கோபுரத்தைப் போன்றே இந்த மணிக்கூட்டுக் கோபுரமும் சாய்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

பீசா கோபுரம் அளவிற்கு அதிகளவில் சரிவடையாத போதிலும், கண்களினால் பார்த்து மாற்றத்தை அறிந்து கொள்ள முடியும்.

Big Ben கோபுரம் 1.64 அடி அளவில் சரிவடைந்துள்ளது. 315 அடி உயரமான குறித்த மணிக் கூட்டு கோபுரம் கடந்த 1999ம் ஆண்டு முதல் கண்காணிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

முதலில் வருடத்திற்கு 0.65 மில்லி மீற்றர் சரிவடைந்து வந்த மணிக்கூட்டு கோபுரம் தற்போது வருடத்திற்கு 0.9 மில்லிமீற்றராக உயர்வடைந்துள்ளது.

எனினும் மணிக்கூட்டுக் கோபுரம் சாய்வதனால் தற்போதைக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படாது என கட்டிடக்கலை வல்லுனர்கள் கூறுகின்றனர்.


ஏதேனும் ஆபத்துக்கள் ஏற்படுவதற்கு இன்னமும் 4000 முதல் 10000 ஆண்டுகள் வரையில் செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிக்கூட்டு கோபுரம் சரிவடைவதற்கான காரணம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. அகஸ்டஸ் புகின் என்பவரினால் இந்த மணிக்கூட்டுக் கோபுரம் வடிவமைக்கப்பட்டது.

1859ம் ஆண்டில் இந்த மணிக் கூட்டுக் கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிந்திய செய்தி : கேணல் கடாபி கொல்லப்பட்டார்

## புரட்சிப் படையினால் சுட்டுக் கொலை





லிபிய முன்னாள் அதிபர் முவாம்மர் கடாபி புரட்சிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடாபி 1969ம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 42 ஆண்டுகளாக லிபியாவில் சர்வாதிகார ஆட்சி புரிந்துள்ளார். சமீபத்தில் இவரது ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. அமெரிக்கா, சில ஐரோப்பிய நாடுகளின் மறைமுக ஆதரவோடு நடந்த இந்தப் புரட்சிப் படையினர் பல நகர்களைப் பிடித்தனர்.

இந் நிலையில் கடநத் ஆகஸ்ட் மாதம் 23ம் தேதி கடாபி பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்டார். புரட்சிக்காரர்கள் கடாபியின் ஆட்களை சிறைபிடிக்கத் துவங்கினர்.

இதையடுத்து கடாபி குடும்பத்தார் நாட்டை விட்டே ஓடிவிட்டனர்.

ஆனால், கடாபி லிபியாவிலேயே தலைமறைவாக இருந்தார். அவர் இருக்கும் இடம் தெரியாமல் இருந்தது. இந்நிலையில் புரட்சிப் படை கடாபியின் சொந்த ஊரான சிர்டேவை இன்று கைப்பற்றியது.அங்கு ஒரு பதுங்குக் குழியில் மறைந்திருந்த கடாபியை புரட்சிப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

# பிரித்தானியாவின் கலப்புத் திருமணத்திற்கு எதிர்பாராத ஆதரவு!!



பிரித்தானியாவில் உள்ள கலப்புத் திருமணம் மற்றும் கலப்பின மக்களின் நிலை மாற்றம் பெற்றுள்ளது என்ற ஜோர்ஜ் அழகையாவின் கருத்திற்கு எதிர்பாராத மின்னஞ்சல் மூலம் ஆதரவுகள் கிடைத்துள்ளன.

இவற்றில் சிலரின் கருத்துக்களை இங்கு வெளியடப்பட்டுள்ளன. ஆங்கிலேய-சீனக் கலப்பினப் பெண் வெறுமனேஇடையிடையே பெயர் குறிப்பிடப்படுவதைத் தவிர தான் ஒருபோதுமே உண்மையான எதிர்ப்பைப் பெற்றிருக்கவில்லையென்று குறிப்பிட்டார். நான் எப்படியுள்ளேன் எனது இனம் என்னவென்பதை மக்கள் பார்ப்பதைவிட எனது குணத்தையே மக்கள் எப்போதும் பார்த்து வந்தார்களென்றார். வேறு நாடுகளைவிடவும் பிரித்தானியாவில் இது குறைவு என்பதில் பெருமையவைதாகவும் கூறினார்.இதேபோல் இல்போட்டைச்சேர்ந்த இந்திய-ஐரிஸ் கலப்பினத்தவரான தான்யா கூறுகையில் தனது இந்தியத் தந்தை ஐரிஸ் தாயாரைத் திருமணம் முடித்தபோது பெரும் எதிர்ப்பைச சந்தித்து, அவர்களது திருமணத்திற்கு 3 பேர் மட்டுமே வந்திருந்தனர் தற்போதும் அவர்கள் நல்லதொரு வாழ்க்கையே வாழ்ந்து வருகின்றார்கள் என்றார்.வோர்செஸ்ரரைச் சேர்ந்த பார்பரா மிற்ரா தான் பாடசாலையில் படித்தபோது பெரும் கேலிக்குள்ளாகியதாகவும் தனக்கு ஆசிரியர்களால் ஆதரவு கிடைத்ததாகவும் மற்றவர்களைத் தன்னுடன் நண்பர்களாக்க முயற்சித்ததாகவும் தெரிவித்தார்.

தனது தந்தை 30 வருடங்களாகத் தனது குடும்பத்தினருடனோ கலாச்சாரத்துடனோ தொடர்புவைத்திருக்கவில்லையென்பதால் தான் தனது ஸ்கொட்லாந்துத் தாயின் குடும்பத்தினருடனேயே தொடர்புவைத்திருந்ததாகவும் பிரித்தானியராக இருப்பதில் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார். கென்ற் பகுதியைச் சேர்ந்த அனிற்றா மக்கள் இன்னமும் தமக்கு ஒரு இனத்தை மட்டுமல்லாது இரு இனங்களை அடையாளங்காட்டும் தன்மை உள்ளதென்பதை விளங்கிக்கொள்ளாதவர்கள் உள்ளனர் என்கின்றார்.லிவர்பூலைச் சேர்ந்த மதிசன் கிங் என்பவர் தனது பிள்ளைகள் இருவரும் எந்தவிதமான இனப்பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவில்லை என்கின்றனர்.

ஹம்ஸயரைச் சேர்ந்த மொய்ரா என்பவரது தாயார் வெள்ளையினத்தவராகவும் தந்தை மேற்கிந்தியக் கறுப்பினத்தவராகவும் இருந்தார்.இவரது குடும்பத்தில் முதல் 3 பேரும் வெள்ளையர்களாகவும் அடுத்ததாகப் பிறந்த தான் சிறிய வயதில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்றும் தந்தையின் குடும்பத்தவருடன் சென்றதாகவும் தற்போது லண்டனில் சட்டவாளராகப் பணிபுரிவதாகவும் குறிப்பிட்டார்.லண்டனைச் சேர்ந்த ஜொசுவா என்பவர் ஆசிய இனத்தவராகும். தாங்கள் ஒருமுறை வீதியால் நடந்துசென்றபோது ஆசிய இளைஞர்களால் தாங்கள் தூற்றப்பட்டது மட்டுமே தாங்கள் எதிர்கொண்ட எதிர்ப்பென இவர் தெரிவித்தார்.

இதுபோலவே செடார் பகுதியைச் சேர்ந்த ஜெரமியும் அனன் போன்றவர்கள் உட்பட இவ்வாறு குறிப்பிட்ட அனைவருமே தாங்கள் பிரித்தானியாவில் பிரித்தானியர்களாகவே உள்ளோமென்பதையே குறிப்பாகத் தெரிவித்தனர்.

ammaatel
Talk for Less



ரொம்ப பேசுங்க...! கொஞ்சம் காசுல...!

HOME ACCOUNT

**INDIA 1/2 p/min**
Landline + Mobile

**SRI LANKA 4 p/min**
Landline + Mobile

Join now and Get
**100 min FREE* to INDIA**
www.ammaatel.com

PC & Mobile diallers available!
For more information call:
UK: 020 7784 6416
020 3318 9929
Canada: +(647) 724 5349
*Limited period only. Terms and conditions apply.

அன்றைய நாட்களில் நீங்கள் தாயகத்தில் சுவைத்த அதே சுவையை
இங்கு உங்கள் நாவில் தரமாகவும் சுவையாகவும் படைக்கிறோம்

Tolworth இல் தற்போது புதிதாக உதயமாகியுள்ளது!

**New Dosa Express**
1st srilankan & South Indian TAKE AWAY

நாவில் சுவையூறும் விதம் விதமான உணவு வகைகளை
பெற்றுக்கொள்ள நீங்கள் உடனே நாடவேண்டிய இடம்






3 வடை
£ 1.00 மட்டுமே!

Buy any 3 Kottu
Get 1 Veg Kothu
Free
£10.99

Opening Special Offer
SPECIAL THALEY
(Only Friday)
£ 4.50
whith offer Las

Out Door Catering
Birthday Wedding
Other Orders welcome

Free Delivery
0208 337 6593
078 28124661, 074 0491 7111

Minimum Order
£15 within 3 Miles

Payment by:Cash/Credit/ Dabit Card

HALAL
Veg & non Veg

No.34, Tolworth Rise South Surbiton KT5 9NN

# Southall Travel™

## Redefining the TRAVEL EXPERIENCE

### Why travel with Southall Travel?

- Number One Travel Agent to India, with over 20 years experience
- Open 24 hours a day, seven days a week. Call us anytime
- Price guarantee will not be beaten on price
- Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- Fast and reliable service
- Multilingual staff offering impartial advice
- UK's 100 Fast Track Companies (Sunday Times 2005)
- Trusted household brand for total peace of mind

### ஏன் சவுத்ஹோல் டிராவல் மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்தி பெற்ற நிறுவனம்.
- நம்பிக்கையான துரித சேவை
- பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறார்கள்.
- யு.கேயில் துரித வளர்ச்சியடைந்த 100 நிறுவனங்களின் பட்டியலில் அங்கம் வகிக்கும் ஓர் நிறுவனம். (சன்டே டம்ஸ் 2005)
- நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

**THINK TRAVEL, THINK SOUTHALL TRAVELTRAVEL**

www.southalltravel.co.uk

ABTA 80626

24 HOURS CALL CENTRE

0208 574 8410